# யாழ்நாதம்

இதழ் 19 - 20

2014



வெளியீடு
யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம்
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மறைந்த எமது அன்புக்குரிய ஆசிரியை திருமதி லீலா நாகரட்ணம் (மத்தியில் உள்ளவர்) விழாவிற்கு வருகை தந்தபொழுது



எமது கல்லூரி மாணவிகள் சரஸ்வதி மண்டபத்தில் நாட்டிய நாடகம் நடத்திய குழுவினருடன் அதிபர் திருமதி ஜெயராஜாவும் பழைய மாணவிகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் இங்கு வசிக்கிறேன். இவ்விடம் அழகாக இருக்கும்."

"It ought to be beautiful, I live here."

# யாழ்நாதம்

இதழ் 19-20 2014

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | கல்லூரி கீதம் | 2 |
| 2. | மலராசிரியரின் செய்தி | 3 |
| 3. | தலைவியின் செய்தி | 5 |
| 4. | பெண்களும் சமய வாழ்வும் | 7 |
| 5. | சொல்வன்மை மிக்க வெண்ணிக் குயத்தியார் | 11 |
| 6. | "பெண்ணிற் பெருந்தக்க யாவுள......." | 14 |
| 7. | கதாப்பிரசங்க மரபு | 18 |
| 8. | கவிதை - "எட்டாம் வகுப்பின் எட்டாத நினைவுகள்..." | 25 |
| 9. | இமயமலைச் சாரலிலே....... | 30 |
| 10. | முருகன் பெருமை | 33 |
| 11. | இசைக்கலை | 39 |
| 12. | பொன்மொழிகள் | 41 |
| 13. | கல்வி | 42 |
| 14. | Journey back to 1943 | 45 |
| 15. | பத்தொன்பதாவது ஆண்டறிக்கை | 47 |
| 16. | இருபதாவது ஆண்டறிக்கை | 51 |


வெளியீடு

**யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவிகள் சங்கம் – கொழும்பு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்லூரிக் கீதம்

திருமிகு மெங்கள் யாழ்நகர்க் கணியாய்த்
திகழ்ந்திடுங் கல்லூரி - எங்கள்
பெருவரு மிந்துப் பெண்களுக் கொளியாய்ப்
பிறங்கிடுங் கல்லூரி - உயர்
மருவுறு கலைகள் யாவையு மின்பாய்
வழங்கிடுங் கல்லூரி - உனைப்
பெருகிடும் அன்பால் புந்தியில் வைத்துன்
புகழினை வாழ்த்தோமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ

இந்து மதப் புகழ் எங்கும் விளங்கிட
இசைந்திடுங் கல்லூரி - இயல்
சிந்தை வளம்பெற மெய்ப் பொருளறிவைச்
சேர்த்திடுங் கல்லூரி - வளர்
செந்தமிழ் ஆங்கில வடமொழி அறிவைச்
சுரந்திடுங் கல்லூரி - உனை
வந்தனை செய்து பைந்தமிழ் மாலை
வாழ்த்தொடு சூடோமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.

மங்கையர் மாண்பை மன்பதை அறிய
முழங்கிடுங் கல்லூரி - ஒளி
பொங்குயர் அறிவுச் சுடரினை யுளத்திற்
பொறித்திடுங் கல்லூரி - இந்து
நங்கையர் வாழ்வின் லட்சிய மனைத்தும்
நல்கிடுங் கல்லூரி - உனை
அங்கையில் மலர்கொண் டன்புடன் பாடி
அனுதினம் ஏத்தோமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.

கலைமகள் உலவக் களிநடம் புரியக்
கண்டிடுங் கல்லூரி - என்றும்
மலைமகள் கொழுநன் மலரடி போற்றி
மாண்புறுங் கல்லூரி - நித்தம்
நிலமகள் நெற்றித் திலகமென் றேத்த
நிலைத்திடுங் கல்லூரி - உனைத்
தலைமுறையாகத் தொழுதுளங் குளிரத்
துதி சொல்லிப் பாடோமோ - உனை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கோமோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர் ஆசிரியரின் மலரும் நினைவுகள்

மலர்களில் மல்லிகையாய், மாதங்களில் மார்கழியாய், கலைகளில் ஒவியமாய், காற்றினிலே தென்றலாய், நாதம் பரப்பி வருகின்றது எமது யாழ் நாதம். பசுமை நிறைந்த பள்ளிக் கூட நினைவுகளையும் நிகழ்வுகளையும் பாசமிகு பாடசாலையின் இன்றைய நிலை செயற்பாடுகள், பழைய மாணவர்களின் பாடசாலை பற்றிய ஆதங்கத்தையும் அவர்கள் வளர்ந்து வாழ்ந்து ஓய்வு பெற்ற நிலையிலும் தங்கள் பங்களிப்பை, தமது பாடசாலைக்கு எவ்வாறு அளித்துக் கொண்டிருக்கிறார்கள், என்பது போன்ற பல விடயங்களை வெளிப்படுத்த, அறியத்தர, உதவுவது ஒரு பாடசாலையின் பழைய மாணவர்கள் வெளியிடும் மலர். இத்தகையதே எமது யாழ்நாதமும். இம் மலரை காலம் காலமாக எமது சங்கம் வெளியிட்டு வருவது வரவேற்கத் தக்கதே. எமது யாழ் இந்து மகளிர் கல்லூரி உருவான படிமுறைகளை சற்றே திரும்பிப் பார்க்கின்றேன். யாழ் இந்துவில் விதையிட்டு யாழ் இந்து மைதானத்தில் முளைவிட்டு, திரு. பொன்னுச்சாமி அவர்களின் இல்லத்தில் துளிர் விட்டு, நல்ல மனம் கொண்ட திரு. திருமதி. சிவகுருநாதன் தம்பதிகள் எமது பாடசாலைக்கென அன்பளிப்பாக தந்த பிறவுண் விதியில் அமைந்த நடுத் தோட்ட வளவில், கிளைகள் பரப்பி, இன்று பெரு விருட்சமாக காய் கனி தந்து நிழல் பரப்பி நிற்கின்றது. எமது பாடசாலை யாழ் இந்து மகளிர் கல்லூரி. இதில் எமக்குத்தான் எத்தனை மகிழ்வு! எத்தனை பெருமை அருள்மிகு இராஜவரோதயப்பிள்ளையாரின் இன்னருட் பின்னணியில் அமைந்திருக்கும் எமது கல்லூரிக்கு விக்னேஸ்வரன் அருளால் விக்கினங்கள் என்றுமே நிகழாதென்பது யதார்த்தம்.

இம்முறை இம் மலரை மலர வைக்கும் பணியை யான் முழுமனத்துடன் ஏற்றுக் கொண்டுள்ளேன். இப்பணியில் ஆக்கமும் ஊக்கமும் எனக்களித்த யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கத்தின் இன்றைய தலைவி, அன்புக்குரிய திருமதி. அபிராமி கைலாசபிள்ளை, முன்னாள் மலர் ஆசிரியை திருமதி. விமலா மணிவாசகன், பிரதிகளைச் சரிபார்த்து தந்த திருமதி மல்லிகாதேவி சரவணபவன், மற்றும் அரிய ஆக்கங்களை மனமுவந்து தந்த என் அன்புச் சகோதரிகளான எமது கல்லூரி பழைய மாணவிகள் மற்றும் கல்விமான்கள் யாவர்க்கும் எனது உளம் நிறைந்த, மனம் கனிந்த நன்றிகள். எமது இவ்வரிய மலரை அழகுற அச்சிட்டு உதவிய யூனி ஆட்ஸ் உரிமையாளர், நிறுவகத்தினர், யாவர்க்கும் எமது சங்கத்தின் சார்பில் நன்றிகள். இம் மலர் தொடர்ந்து காலம் காலமாக மணம் பரப்ப எல்லாம் வல்லவனை வேண்டி நிற்கின்றேன்.

"It ought to be beautiful we live here"

**திருமதி. இராஜேஸ்வரி ஜெகானந்த குரு**
மலர் ஆசிரியை
பழைய மாணவர் சங்கம்
கொழும்புக் கிளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுதுளி பெருவெள்ளமாய்.....

யாழ் நகரில் பிரசித்தி பெற்ற பெண்கள் பாடசாலைகளில் ஒன்றான எமது யாழ் இந்து மகளிர் கல்லூரி அண்மைய ஆண்டுகளில் மேலும் ஒருபடி முன்னேற்றம் கண்டு கல்வி, விளையாட்டு, கலை நிகழ்வுகளில் பிரகாசித்து வருகின்றமை மகிழ்ச்சியளிக்கின்றது. இந்து மத தமிழ் பாரம்பரியங்களை சிறப்புடன் தொடர்வதில் இன்னும் பெருமை கொள்கிறது.

தமிழரின் பாரம்பரியச் சொத்தான கல்வி இன்றைய நெருக்கடியான நிலையிலும் மேலோங்கி நிற்பது எமக்கெல்லாம் பேரானந்தத்தை ஏற்படுத்துகின்றது. உறவுகளை உடைமைகளை வதிவிடங்களை வாழ்விடங்களை அவயவங்களை என அளப்பரிய இழப்புக்களை எமது இனம் இழந்து விட்டு ஏதிலிகளாக நிர்க்கதியாக நிற்கும் இன்றைய நிலையிலும் எமக்கு அழியாச் சொத்தாக நிலைத்திருப்பது கல்வி ஒன்றுதான் என்றால் அது மிகையாகாது. அந்தவகையில் கல்விச் செல்வத்தை கட்டிக் காப்பதில் பாடசாலைகள் முக்கிய பங்கை ஆற்றுகின்றன.

கடந்த காலத்தில் எத்தனையோ பாடசாலைகள் சேதமடைந்தன. இன்னும் பல பாடசாலைகள் மக்களோடு இடம் பெயர்ந்தன. கட்டடமில்லாத வேளைகளில் மரங்களின் கீழ் படித்து எமது மாணவச் செல்வங்கள் பல சாதனைகள் படைத்தனர். இன்னும் பல பாடசாலைகள் போதிய வசதிகள் இல்லாது இயங்குகின்றன.

அதிஷ்ட வசமாக எமது பாடசாலை ஓரளவு சிறப்பாக இயங்குவதற்கேற்ற நிலையில் இருப்பது மகிழ்வை ஏற்படுத்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் வாழ்வு நிலையில் ஏற்பட்ட சரிவினால் பலர் பொருளாதார வசதிகளின்றி இருக்கின்ற இந்த வேளையிலும் கல்வியைக் கைவிடாமல் தொடர்கின்றனர். இந்த நிலையில் நாம் எமது பாடசாலையின் தேவைகள் அறிந்து நேசக்கரம் நீட்டுகின்றோம்.

சிறு துளிதான் பெருவெள்ளம் ஆகிறது போல நாம் செய்யும் உதவிகள் இலங்கைக்கு பாலம் கட்டிய இராமபிரானுக்கு அணில் செய்த உதவிபோல இருப்பினும் இன்றைய நிலையில் அவ்வுதவிகள் பலருக்கும் தேவைப்படுவதால் நாம் அனைவரும் எம்மாலியன்ற உதவிகளைத் தொடர்ந்து செய்வது காலத்தின் தேவையாகும்.

ஆற்றல் ஆளுமைமிக்க அதிபரும், செயற்றிறனும் கடமைப்பற்றும் மிக்க ஆசிரிய குழாமும் தமது வகிபங்கினால் எமது பாடசாலையை முன்னேற்றமான திசையில் இட்டுச் செல்கிறார்கள். அவர்களுக்கும் மாணவர்களுக்கும் பாடசாலைக்கும் நேசக்கரம் நீட்டி உற்சாகமூட்டுவதில் எமது பழைய மாணவியர் சங்கம் தொடர்ந்து பாடுபடும்.

இவ்விதழை வழமைபோல் வெளிக்கொணர்வதில் பங்காற்றிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி. அ. கயிலாசபிள்ளை**
தலைவி
பழைய மாணவர் சங்கம்
கொழும்புக் கிளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களும் சமய வாழ்வும்

ஆக்கம் - **வசந்தி தயாபரன்**

உலகில் ஆண் பெண் ஆகிய இரு பாலாரும் கூடி வாழ்கின்ற போதிலும், "பெண்" பற்றிய மனப்போக்குகளும் சிந்தனை மரபுகளும் சற்றே வேறுபட்டே காணப்படுகின்றன. பெண் எப்போதும் எல்லா வகையிலுமே உன்னிப்பாக நோக்கப்படுகின்றாள் என்பது தெளிவு.

எமது தமிழ் மரபினை நோக்குவோமேயானால், சங்க காலம் தொட்டே பலராலும் வியந்து போற்றப்படும் பண்பாட்டு நிலை பெண்ணுக்கு வாய்த்திருந்தது. இன்னும் பின்னோக்கி சென்றால் வேத காலத்துப் பெண்கள் குறித்த இன்னும் மேம்பட்ட கருத்துக்களை நாம் காணலாம்.

பிற்பட்ட காலத்தில் சமய இலக்கியங்களை ஒரு புதிய நோக்கில் படைத்தருளிய காரைக்கால் அம்மையார் முதலாய பெருமாட்டிகளை சந்திக்கிறோம்.

*அன்றுந் திருவுருவங் காணாதே ஆட்பட்டேன்*
*இன்றுந் திருவுளங் காண்கிலேன் - என்றுந்தான்*
*எவ்வுருவோ நும்பிரான் என்பாகட் கென்னுரைக்கேன்*
*எவ்வுருவோ நின்னுருவ மேது*

என்று தெய்வானுபவங்களை வெளிப்படுத்தி அதற்கு ஏதுவாக புதிய பா மரபுகளையும் அறிமுகப்படுத்தியவர் அம்மையார்.

கோதை நாச்சியார் அல்லது ஆண்டாள் என்ற பெண்புலவரும் இறைவன் மீது காதல் மீதூர பற்றுக்கோடற்றுத் தவிக்கும் ஆன்மாவாகத் தம்மை வெளிப்படுத்திப் பாடிய பாடல்கள் ஒப்பற்றவை.

இவ்வாறு காலந்தோறும் சமய வாழ்வில் தம்மை புகுத்திக் கொண்ட பெண்ணினம் பல முட்டுக்கட்டைகளைத் தாண்டியே தனது சமூக இருப்பை நிலைநாட்டி வந்தது. பெண்களை அடிமைப்படுத்தி வைத்த சமூகத்தளைகள், பழக்கவழக்கங்கள் என்பவற்றை நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலகுவில் அடையாளம் காணலாம். பாரதி என்ற யுகபுருடன் பாடியது போல் பெண்ணில் பொதிந்துள்ள ஆற்றல் - சக்தி என்பன தெய்வமாக போற்றத்தக்கன. பெண் அடிமைச்சிந்தனைகள் பெருமளவில் நெகிழ்ச்சியுற்றுவிட்டன என்பது மகிழ்ச்சிக்குரிய விடயம். ஆனால் பெண்ணானவள் தனது சமய வாழ்விலும் சமூக வாழ்விலும் வேண்டாத சில ஆடம்பரத் தளைகளை பூட்டிக் கொண்டுவிட்டமை வேதனைக்குரியது. இது குறித்து நாம் சிந்திக்க வேண்டிய முக்கியமான தருணமிது.

நூறு ஆயிரம் என்று ஆண்டுக்கணக்குடன் காலம் சுழல்கிறது உலகெங்கணும் காலமாற்றத்துடனான வளர்ச்சியும் தேய்வும் எல்லாத்துறைகளிலுமே ஏற்படக் காண்கிறோம். சமூகங்களும் அவற்றின் மரபுகள் - நம்பிக்கைகள் என்பனவும் கணந்தோறும் மாற்றங்களுக்கு உள்ளாவதையும் காண்கிறோம். இனக்குழுமங்களின் தொன்மையான பாரம்பரிய வழிபாட்டு முறைகள்கூட இவற்றில் அடியுண்டு போகின்றன என்பது கண்கூடு.

எமது முன்னோர், உலக வாழ்க்கையில் சில நியமங்களை வகுத்திருந்தனர். இறைசிந்தனை அவற்றுக்கெல்லாம் ஒரு பற்றுக்கோடாக இருந்தது. ஒழுக்கம் நல்லறங்கள் என்ற சீர்விழுமியங்கள் அதனைப் பின்னிச் செழித்திருந்தன. பலதரப்பட்ட மக்களினது இணைப்புக்கு சமய வாழ்வு ஏதோ வகையில் துணைபுரிந்தது. பின்னால் வந்த பேதைகள் சிலரால் மக்களிடையே பிளவுகளும், பிணக்குகளும் வளர்ந்தமை ஒரு தனி வரலாறு! ஆனால், இன்று இலத்திரனியல் இணைப்புக்கள் பெருகுந்தோறும் சமயம் என்ற பொதுவெளியின் பயன்பாடு அருகி விட்டது.

காலமாற்றத்திற்கு பெண்களும் ஈடுகொடுக்கவே செய்கின்றனர். வெவ்வேறு சூழற்கட்டமைப்புகளில் பலதரப்பட்ட பணிகளைச் செய்யும் பெண்கள் பெருகிவிட்டனர். புதிய சிந்தனைபோக்குகள், மனப்பாங்குகள் பெண்களைப் புகுத்திவருகின்றன. இச்சலனங்கள், பெண்ணின் புறச்சூழலில் நிகழ்ந்து கொண்டிருக்க இறைநம்பிக்கை - இறைசிந்தனை — சமய வாழ்வு என்பன அவள் அகச்சூழலில் ஒளிர்கின்றன. பெண் மனிதகுலத்தின் சந்ததியைப் பெற்றுத்தருபவள் மட்டுமன்றி, அவர்கட்கு இறைநம்பிக்கையையும், மொழிப்பற்றையும் கூடக் கடத்தவல்லவள். பெண்மை என்ற பண்பை, சேவையும் அர்ப்பணிப்பும் ஒன்று திரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாகவே நம் சமுதாயம் என்றென்றும் போற்றி வருகின்றது. அதனால் தான் இன்றுங்கூட நமது பெண்கள் சமய வாழ்வினை மதித்துப் போற்றி, பின்பற்றி மனநிறைவு பெறுகின்றனர்.

சமய வாழ்வு என்றால் என்ன? என்ற கேள்வி பலர் நெஞ்சில் எழலாம். அன்புநெறி என்று போற்றப்படுவதன் மூலம் தன்னை "மனித நேயம்" என்ற தளத்தில் எழுந்து நிற்கும் பெருநெறியாக சைவம் இனங்காட்டுகிறது. இந்த ஏற்றமிகு பாரம்பரியம் பல அருளாளர்களின் வாழ்வின் மூலம் அதனை நிறுவியும் வந்துள்ளது. பிட்டவிக்கும் வந்தி கூப்பிட்ட குரலுக்கு ஓடி வந்த கூலியாளாக, பூசலாரின் மனக்கோயிலில் மனமுவந்து குடியேறியவனாக, "இறைவன் அன்பிற்கு மட்டுமே வசப்படுவான்" என்று உணர்த்த பலநூறு சம்பவங்கள்! சமயப்பனுவல்களும் புராணக்கதைகளும் செவிவழிச் செய்திகளும் என ஏராளம் நம்மிடை நின்ற இதை நினைவு படுத்துகின்றன. பொன்னும் பொருளும் பகட்டுமா? அடியாரின் தூய அன்பு மீதூரும் உள்ளமே இறைவன் நாடுவது, என்று உபநிடதங்கள் முதற் கொண்டு தமிழ்மறைகள் ஈறான நூல்கள் இயம்புகின்றன.

இன்று சமூகம் பொய்மை மலிந்து சமூக அவலங்கள் நிறைந்ததாக புரையோடிக் கிடக்கையில் நம்மிற் பலரும் பொய்மையாளராக மாறுகின்றோம். ஈற்றில் அது எமது சமய வாழ்விலும் நுழைந்து விடுகின்றது. இறைவனது அருளையும் விலைக்கு வாங்கிவிடலாம் என்ற மயக்கம் எம்மிடையே தோற்றம் பெற்றுவிட்டது. அதனை நெய்யூற்றி வளர்க்கும் பம்மாத்துக்களும் பெருகி விட்டன. நம் பெண்களில் சிலர் இந்த மாயவலையில் சிக்குண்டு கிடப்பது மிகப் பெரும் அவலமே!

நாகரிகம் என்பது உடையிலும் ஒப்பனையிலும் வேறுபிற விடயங்களிலும் இருந்துவிட்டுப் போவதுபோல சமயத்திலும் நுழைந்து நகைக்கிறது. சமயச் சடங்குகளும் வழிபாட்டு முறைகளும் வரவேற்பறையிலுள்ள ஓர் அலங்கார பொருளைப் போல உருமாறி விட்டன. எமது பெண்கள் அனுபவிக்கும் சொல்லொணாத் துயரங்கள் - அவர்கள் இறைவனிடம் கதறியழுது செய்யும் முறைப்பாடுகள் எத்தனை! அவற்றைக் கேட்கின்ற அதே திருச்செவியில் அலங்கார பதுமைகள் பலர் ஒன்று கூடி தங்க வளையல்கள் குலுங்க தமது அந்தஸ்தை காட்டுவதற்கென செய்யும் பிரார்த்தனைகளும் விழுகின்றனவா? பட்டாடைகளும் படாடோபங்களும் அள்ளியிறைக்கப்படும் பணமும் இறைமுன்னிலையில் எதற்காக? எல்லாவற்றையும் நானறிவேன் என்று தான் இறை விக்கிரகம் மோனப்புன்னகையோடு கொலுவிருக்கிறதோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு தான் நாம் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும் "எல்லா மனிதரும் இறைவன் முன்னால் ஒன்று" என்ற தத்துவத்தின் செயல்வடிவமே, எமது சடங்குகளாக விரிவுபெற்றன. பல்வேறு காலகட்டங்களில் மக்கள் இந்த உண்மையை மறக்கத் தலைப்பட்டபோதுகளில் அருளாளர்கள் அவர்களுக்கு நல்வழி காட்டினர்.

வழிபாடு என்பது ஆன்மா, முழுமனதோடு இறைவனிடம் தன்னை ஒப்புவிக்கின்ற ஒரு உன்னதமான நிலை. பேலானந்த உணர்வு அங்கு "நான்" மறையவேண்டும். எல்லோரும் ஒன்று நாமெல்லாம் "அடியார்கள்" என்ற ஒருமைப்பாடு பிறக்கவேண்டும். இதற்குக் குறுக்கே, பணமோ அந்தஸ்தோ வேறு எந்த வேண்டாச் சிந்தனையோ நிற்கலாகாது. இன்றைய அறிவியல் உலகம், தனது புத்தம்புதிய ஆராய்ச்சிகளால் எம்முள் வேரோடிக்கிடக்கும் சமய உண்மைகளை இப்போது கண்டுபிடித்து விளக்கி இதை உணராமல் நாம் - அதிலும் பெண்கள் செல்லும் வழியறியாமல் திகைத்த, சமய வாழ்வையும் கொச்சைப்படுத்துகிறோம். வழிபாடு, விரதம் எல்லாவற்றையும் ஒரு குறுகிய சிந்தனை வட்டத்துள் அடைக்கும் சில பெண்களை என்னென்பது!

நாம் ஒன்றும் முற்றுந் துறந்த முனிவர்களல்ல உண்மைதான், ஆனால் பெண்ணொருத்தி காருண்யமும் கனிவும் நிறைந்த பெண்மையின் வடிவன்றோ! பண்பு பெண்ணுக்கு இறைவன் அளித்தத பெருங்கொடை அந்தப் பெண்மை, சகமனிதனின் துயரைத் துடைக்கின்ற - போலியான வழிபாடுகளைப் புறந்தள்ளுகின்ற - மெல்ல மெல்ல மனதைப் பக்குவப்படுத்திக் கொள்கின்ற சக்தியை நிச்சயமாகத் தன்னகத்தே பொதித்திருக்கும்.

மகான் அரவிந்தர் கூறுவார், "ஆசை ஆணவமாயை, மடைமை இருள் என்பவற்றில் மனிதர்கள் ஆழ்ந்துள்ளனர். அவர்கள், தம் மனதில் நிகழும் போராட்டங்களிலிருந்து மேலே உயரவேண்டும்" என்று.

ஒரு பெண்ணின் சிந்தனை - நடத்தை என்பவற்றில் ஏற்படக்கூடிய மாற்றங்கள், மிகப்பெரிய சமூக மாற்றத்தையே நிகழ்த்திக் காட்ட வல்லன. தான் செய்யும் ஒவ்வொரு செயலும் அவளது உண்மையான சமயவாழ்வை நோக்கிய நகர்வேயாகும். சமயத்தை, தமது ஆடம்பரவாழ்வினை, பறைசாற்றும் ஓர் கருவியாக ஆக்காது. எல்லா உயிர்களையும் ஒன்றேபோல் நோக்கி அன்பு செய்வதற்குரிய வழியாக மாற்றுவது பெண்களின் கையிலேதான் உள்ளது. மாசற்ற மனத்துடன் மனிதநேயத்துடன் ஒரு பெண் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியும், செய்யும் ஒவ்வொரு செயலும் அவளது உண்மையான சமயவாழ்வை நோக்கிய நகர்வேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொல்வன்மை மிக்க வெண்ணிக் குயத்தியார்

சற்சொரூபவதி நாதன்
சிரேஷ்ட ஊடகவியலாளர்

**சொ**ல்வன்மை அனைவருக்கும் வாய்ப்பதன்று. சிறந்த அறிவுடையவர்களுக்கும் தம் அறிவு விளக்கத்தை பிறர் அறியச் செய்வதற்கு சொல்வன்மையே பெரிதும் உதவுகிறது. இதனாலன்றோ வள்ளுவரும் 'நா நலம்' என்று ஒரு அதிகாரமே வகுத்தார்.

சொல்வன்மை உள்ளவர்களே சிறந்த கவிஞர்களாக புகழ் பெறுகிறார்கள். ஒருவன் விரும்பாததை அவன் எதிரே கூறும் பொழுது அவன் மனம் நோவாமல் எடுத்துக் கூறவும் இந்த சொல்வன்மை அவசியமாகிறது.

இச் செயலை திறம்பட செய்த பெண்பாற்புலவர்தான் வெண்ணிக் குயத்தியார். வெண்ணி என்ற ஊரில் குயவர் குடியிற் பிறந்தவர் குடிப் பெயரே அவரது பெயராயிற்று. பல பாடல்களை அவர் பாடியிருத்தல் வேண்டும். ஆனால் இன்று நமக்கு கிடைப்பதே ஒரே ஒரு பாடல்தான்.

ஆனால் அந்த ஒரே ஒரு பாடலால் இலக்கிய உலகில் சிறந்த இடத்தை அவர் பெறக் காரணமாக இருந்தது அவரது சொல்வன்மையேதான். அவரால் பாடப் பெற்ற மன்னன் கரிகால் வளவன். அவன் சேரமான் பெருந் சேரலாதனுடன் வெண்ணிறப் பறந்தலை என்ற ஊரில் போரிட்டான். இருவரும் சிறந்த வீரர்கள். ஆனால் போரின் இறுதியில் கரிகாலன் எறிந்த வேல் சேரமான் மார்பில் குத்தி முதுகுப் புறமாக வெளிப்பட்டு விட்டது.

அந்நாளில் புறப்புண் படுவது வீரனுக்கு அவமானமாக கருதப்பட்டது. புறமுதுகு காட்டி ஓடுகையில் அவனது முதுகில் புண்படவில்லை. ஆயினும் சேரன் அதனை வெறுத்தான். முதுகுப் புண்ணுடன் வீடுதிரும்ப விரும்பாத அவன் வடக்கே இருந்து உயிர் துறக்க முற்பட்டான்.

தருப்பைப் புல்லை அடுக்கி வடபுறம் நோக்கி இருந்து ஊன் உறக்கம் இன்றி சிறிது சிறிதாக உயிரை விடுதல் வடக்கிருத்தல் என்ற செயலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுடைய நண்பர்களாகிய கழா அத்தலையார் வெண்ணிக் குயத்தியார் போன்ற புலவர்கள் தடுத்தும் அவன் தன் தீர்மானத்தை கைவிடவில்லை.

சேரனுடைய அறவீரம் மறவீரம் இரண்டையும் நேரில் கண்டும் அவனுடன் போரிட்ட கரிகாலன் அவனை மதிக்கவில்லை.

இந்நிலையில் சேரன் இறந்து விடுகிறான். அவனைக் கரிகாலன் மதிக்கவில்லை என்ற செய்தி வெண்ணிக் குயத்தியாருக்கு எட்டியது. கரிகாலன் வெற்றிக் களிப்பில் பெருந் தவறு செய்து விட்டான் என்பதை அவனுக்கு குத்திக் காட்ட அவர் விரும்பினார். நேரடியாக கரிகாலனிடம் சென்று தன் சொல்வன்மையைப் பயன்படுத்தி ஒரு கவிதை பாடினார். சேரனை மட்டும் அவர் புகழவில்லை. கரிகாலனையும் புகழ்ந்தே பாடினார். ஆனால் அதில் பொதிந்துள்ள பொருள் அவரது பாடலை அமரத்துவம் பெறச் செய்து விட்டது. குளிர்ந்த பெருங் கடலில் கடற்படையைச் செலுத்தி வெற்றி பெற காற்றைக் கூட தனக்கு உதவியாக்கி கொண்டு வெற்றி பெற்ற சோழன் மரபில் உள்ளவனே! யானைப் படையை உடைய கரிகால் வளவனே! போரில் எதிர் நின்று தாக்கி ஆற்றலை புலப்படுத்திய அவன் உன்னைக் காட்டிலும் நல்லவன் அல்லனோ. வெண்ணிறப் பறந் தலையில் தேவருலகத்தை அடைய வேண்டிப் புறப் புண்ணுக்கு வெட்கி வடக்கிருந்தானே என்ற பொருளில்பாடினார்.

*"நளி இரு முந்நீர் நாவாய் ஓட்டி*
*வழி தொழில் ஆண்ட உரவோன் மருக*
*களி இயல் யானைக் கரிகால் வளவ!*
*சென்று அமர்க் கடந்த நின் ஆற்றல்*
*தோன்ற*
*வென்றோய்! நின்னிலும் நல்லன்*
*அன்றே*
*கலிகொள் யாணர் வெண்ணிறப்*
*பறந்தலை*
*மிகப் புகழ் உலகம் எய்திப்*
*புறப்புண் நாணி வடக்கு இருந்தோனே!*

*(புறம் 66)*

கரிகாலன் வெற்றியைப் புலவர் பாராட்டாமல் விடவில்லை. ஆனால் வெற்றியும் தோல்வியும் மாறி வரும். அப்படியிருக்க ஏன் ஒருவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னைப் பற்றி உயர்வாக எண்ணினாலும் பரவாயில்லை ஆனால் பிறரைப்பற்றி மதிப்புக் குறைவாக நினைக்கலாமா? இத்தவறை கரிகாலன் போன்றோர் செய்யலாமா.? இதனையே "நின்னிலும் நல்லவன் அன்றே அவன் என்ற சொற்களால் புலவர் சாடியுள்ளார். கரிகாலன் படைவீரரின் துணையுடன் வெற்றி பெற்றான் அவனை வீரன் என்று சொல்லலாம். ஆனால் நல்லவன் என்று சொல்ல முடியாது.

உனக்கு வெற்றியுள்ளது. பலரின் ரத்தத்தைச் சிந்தி அதனை நீ பெற்றாய். ஆனால் சேரனிடம் பண்பாடு உள்ளது. கடமை உணர்வுடன் அவன் போரிட்டான். வெற்றி கிடைக்கவில்லை.

ஆனால் உயிரை பெரிதாக மதிக்காமல் மானத்தை அவன் பெரிதாக மதித்தான். அதனால் அவன் நல்லவன். கரிகாலனோ பிறர் நற்பண்பைக் கூட அறியாமல் அவனை மதிக்காது விட்டான்.

போரில் வெற்றி பெறுபவர்களை எல்லோரும் புகழ்வர். ஆனால் போரில் தோற்றவனை புகழ்ந்து பாடிய பெருமை ஒரு பெண் புலவரையே சாரும். அதிலும் வென்றவன் எதிரே சென்று இருவரையும் ஒப்பிட்டு பாடினார். தோற்றவன் வென்றவனைப் பார்க்க நல்லவன் என்று துணிந்து பாடினார். கரிகாலன் சிறந்த வீரன் அவன் அகங்காரத்தால் அழியக் கூடாது என்ற நல்லறிவு புகட்டும் ஒப்பற்ற செயலை வெண்ணிக் குயத்தியார் தன் சொல்வன்மையால் சாதித்தார். அவர் பாடல் இதனால் அமரத்துவம் பெற்றது.

*நன்றி*
*சங்கமம்.*

**செல்வத்தை வைத்துச் சென்ற தகப்பனை விட, தொழில் கற்பித்துச் சென்ற தகப்பனே தன் குழந்தைகளுக்கு அதிக பாதுகாப்பு அளித்தவனாகின்றான்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பெண்ணிற் பெருந்தக்க யாவுள ......."

கலாபூஷணம், திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு
பழைய மாணவி, யாழ். இந்து மகளிர் கல்லூரி
முன்னாள் அதிபர், நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்

**பெ**ண்மை - தியாகம் நிறைந்தது, பொறுமை கொண்டது, அன்பை வளர்ப்பது, சகிப்புத் தன்மை அதன் ஜீவன். வேத காலத்திலிருந்து இன்று வரை பெண் சாதிக்காதது மிக மிக குறைவு. ஆன்மீகத்தில் சரி, லௌகீகத்தில் சரி பெண்கள் மிளிரத்தான் செய்கின்றார்கள். வேத காலத்தில் இராத்திரி, உஷை போன்ற பெண் தெய்வங்கள், உபநிடதம் கூறும் மைத்ரெயி, சிலம்பு கூறும்கண்ணகி, மாதவி, மணிமேகலை, இதிகாசம் கூறும் சீதை, திரௌபதி, கற்புக்கரசிகளாம் அருந்ததி, நளாயினி, ஈசனையே "அம்மா" என அழைக்க வைத்த காரைக்கால் அம்மையார், பாண்டி நாட்டில் சைவம் வளர்த்த மங்கையர்கரசியார், மதங்கசூளாமணியார் இவர்களை இவ்விடத்தில் குறிப்பிட்டாதல் சாலப் பொருந்தும்.

பெண்ணே! இல்லத்தின் கண்ணே! - இந்துமதம் கூறும் புருடார்த்தங்கள், அறம், பொருள், இன்பம், வீடு என்பனவாம். இந்து சமயி ஒவ்வொருவரும், இந்த நான்கினையும் உறுதிப் பொருளாக, தளமாகக் கொண்டு தனது வாழ்க்கையை, அமைத்தாக வேண்டும். அறம் என்பதற்கு தர்மம் என்றும், கடமை என்றும், பொருள் கொள்ளலாம். தனது கடமையைச் செவ்வனே ஆற்ற ஒருவனுக்குப் பொருட் செல்வம் இன்றியமையாததாகும். இப்பொருட் செல்வமும் அறவழியே ஈட்டப்பெறல் வேண்டும். அறவழி நின்று வாழ்வை அமைக்க ஒருவனுக்கு ஒருத்தியின் துணை தேவைப்படுகின்றது. இந்த இணைப்பே இன்பம் ஆகின்றது.

இந்தவகையில், இல்லத்தின் கண் ஆகின்றாள் பெண். இவளே இல்லத்தரசி, இல்லம் காக்கும் நாயகி, ஒருவனது வாழ்க்கைத் துணை. இவளிடம் கருணை, அன்பு, பணிவு, பாசம், பக்குவம், விவேகம், தியாகம், பொறுமை ஆகிய நற்பண்புகள் நிரம்ப அமைந்தாக வேண்டும், அப்போது தான் அந்த இல்லறம் நல்லறமாகும். இல்லத்தரசி கடைப்பிடிக்க வேண்டியவை பல உள. ஒரு நல்ல மனைவி, கற்புடையவளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்” என்னும் கருத்தை, அகத்தே உடையவளாக, தனது குழந்தைச் செல்வத்துக்கு தியாகத்தாயாக, வாழ்ந்தாக வேண்டும். கணவனுடைய வருவாய்க்குத் தக்க செலவு செய்தாக வேண்டும். ஒருவனுக்கு அவனது மனைவி, வருவாய்க்குத் தக்க செலவு செய்பவளாக அமைந்தால் தான், அவன் நிம்மதியாக வாழ முடியும் வரவு ஒரு மடங்காக இருக்க, இருமடங்கு செலவு செய்யும் மனைவி ஒருவனுக்கு அமைவாளேயானால். அவனுக்குத் துன்பம், இடர், இன்னல் எல்லாமே, வீட்டினுள் இருப்பதாகக் கொள்ளலாம். ஒரு இல்லாளிடம் அழகு அறிவு, அமைந்திருக்கலாம், அதே நேரம் அவளிடம் நற்பண்புகள் இல்லையெனின் அவர்களது வாழ்வு வெறுமையானதாகவே அமையும். வாசமற்ற ரோஜாவாகி விடும்.

ஒரு பெண்ணுக்கு கற்பு என்னும் திண்மையும் அமைதல் அவசியம். கற்பின் மகிமை சொற்களில் அடங்கா. கற்புடைய பெண்ணுக்குக் காலனும் அடங்குவான் என்பதற்கு சாவித்திரி சத்தியவான் வரலாறு சான்றாகும். சத்தியவானின் உயிரை மீட்டுக் கொடுத்தது சாவித்திரியின் கற்பு. தன் கணவன் கள்வனல்லன், களங்கமற்றவன், என்பதை நிரூபித்து, மன்னனைத் தன் பிழையை, தவறை, உணர வைத்தது கற்புக் கனல் கண்ணகியின் கற்பு.

கற்புடைய பெண் தன்னையும் காத்துத் தன்னைச் சார்ந்திருப்பவர்களையும் கௌரவாக வாழ வைப்பாள் என்பது நிஜம். இவளே ஒரு பெண்ணுக்கு இலக்கணமாக அமைகின்றாள். கற்பு என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவாக அமைந்துள்ளது் அமைதல் அவசியமுமாகும்.

எவ்வாறு ஒரு ஆண், தன் மனைவியானவள் பிற ஆடவரைத் தவறான நோக்குடன், ஏறெடுத்துப் பார்க்காமல் இருக்க வேண்டும், எனக் கண்டிப்பாக எதிர்பார்க்கின்றானோ, அதே போன்று, அவனும் ஒழுக்கசீலனாக அவசியம் அமைந்தாக வேண்டும் இதையே அவனது மனைவியும் எதிர்பார்ப்பாள் என்பதை அவன் உணர்ந்தாக வேண்டும். இது இல்லறத்தில் மிக மிக அவசியம்.

இதிகாசத்தில், கற்பின் காவலனாக வாழ்ந்து காட்டியவன், நாராயணனின் அவதாரமான ஸ்ரீராமன். அதே நேரம் சிவபக்தனும், வீணைக் கொடியோனுமான இலங்கேஸ்வரன் பிறன் மனைவியான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதாபிராட்டியை விரும்பிய குற்றத்திற்காக, அவனது குலமே அழிந்தொழிந்த வரலாற்றைச் சற்றுச் சிந்தித்துப்பாருங்கள்.

கண்ணான பெண்ணுக்கு பொறுமை எனும் பண்பு மிக அவசியமாகும்.

*"பொறுமை என்னும் நகை அணிந்து*
*பெருமை கொள்ளவேண்டும் பெண்கள்"*

என்னும் வாசகம் யாம் அறிந்ததே.

"சினம் என்பது சேர்ந்தாரைக்கொல்லி" என்பது யாம் அறிந்ததே. வார்த்தைகளைக் கோபத்தில் அள்ளி வீசலாம். ஆனால் அதன் பின் விளைவு? சிந்திய சிதறிய வாாத்தைகளை மீண்டும் பொறுக்கி வைக்க முடியாது, என்பது யதார்த்தம். கணவன் தவறு செய்யும் போதுதான் மனைவி சினம் அடைகின்றாள். இது நிஜம். அவனைத் திருத்த முயல்கிறாள் - அதற்கு சினம் எவ்வகையிலும் கை கொடுக்காது. கணவனது தவறைச் சுட்டிக் காட்டவும் நேரம் காலமிருக்கின்றது. அவன் நிம்மதியாக, மகிழ்ச்சியாக இருக்கும் போது, சாதுரியமாக அவனது தவறுகளை அமைதியான முறையில் சுட்டிக் காட்டினால் நிட்சயம் அங்கு வெற்றிதான். சுருங்கச் சொல்லின், இல்லம் என்னும் பூங்காவை போர்க்களமாக்காது வைத்திருத்தல் ஒரு இல்லத்தரசியின் விவேகத்தில் தங்கியுள்ளது.

இதே போன்று குழந்தைகளை வளர்த்தெடுப்பதிலும் ஒரு தாயின் பொறுப்பு மிக முக்கியம் வாய்ந்தது. ஒரு நாட்டின் குழந்தைகள் தான், நாட்டின் எதர்காலத்தை நிர்ணயிப்பவர்கள். முன்பு போல் அல்லாது இப்போது குழந்தைகளின் இயல்புகள் பெரிதும் மாறுபட்டுள்ளதை யாம் காண்கின்றோம். அவர்களை அடக்கி ஆண்டு நல்வழிக்குக் கொண்டுவருதல் இலகுவான காரியமன்று என்னும் உண்மை அன்னையர்க்கும், ஆசான்களுக்கும் தான் நன்கு புரியும். குழந்தைகள் மேதைகளாவதோ, சீரழிவதோ, அன்னையின் கரங்களில் தான் முதலில் தங்கியுள்ளமை கண்கூடு.

இவை மாத்திரமல்லாது தன் கணவனைப் பெற்றுத்தந்த மாமன் மாமியரையும் ஒரு பெண் பேணி, மதித்தாகவேண்டும். எனவே பெண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லதோர் மனைவியாக, பத்தாவுக் கேற்ற பதிவிரதையாக, கருணையும் தியாகமும் சாதுரியமும் நிறைந்த தாயாக பொறுமையுடைய மருமகளாக, வாழ்ந்தேயாக வேண்டும். -

*"பத்தாவுக் கேற்ற பதிவிரதையானால்*
*எத்தாலும் கூடிவாழலாம் - சற்று*
*ஏறுமாறாக நடப்பாளேயாமாகில்*
*கூறாமற் சந்நியாசம் கொள்".*

என்பது ஔவை சொன்னது.

இத்தகைய நற்பண்புகளையும், கடமைகளையும். பொறுப்புக்களையும் கொண்டிருக்கும் பெண் இன்று இவற்றினின்றும் தளும்ப ஆரம்பித்துள்ளாள். இதற்கு விதி விலக்குகளும் உண்டு. தமது பாரம்பரியங்களைக் கட்டிக்காக்க வேண்டிய கண்ணான பெண், இன்று புடைவை கட்டத் தயங்குகின்றாள், தலைமுடியை வாரிக் கொண்டை போட, பின் வாங்குகின்றாள். முடியை நறுக்கித் தலைவிரி கோலமாகப்போவது தான் நாகரிகம் என்று கண்டு பிடித்து விட்டாளாம். புடவை கடடினால் பயணம் செய்யும் போது இடைஞ்சலாக உள்ளதாம், ஏன்? முன்னைய பெண்மணிகள் சேலை கட்டவில்லையா? பயணம் செய்யவில்லையா? பெண்கள் தலைமுடியை விரித்த வண்ணம் தொன்றினாலே, அது அமங்கலம் என்பதைக் கண்ணகித் தாய்தான் உணர்த்தியுள்ளாளே! பெண்ணின் இந்த நிலை, காலத்தின் கோலமா? இல்லை, பெண் இனத்திற்கு நேர்ந்த சாபமா? இல்லை, அந்நிய நாட்டுக் கலாசாரத்தில் இவள் கொண்ட தணியாத தாகமா? பெண்ணே சிந்தித்துப் பாருங்கள்? மோகமா!

இன்று, நீ, கல்வி, கலை, வைத்தியம், அரசியல், விஞ்ஞானம் ஆகிய சகல துறைகளிலும் உயர்ந்து விட்டாய்! இல்லை என்று சொல்லவில்லை. நிரம்பக் குடும்பத்துக்காகச் சம்பாதிக்கவும் செய்கிறாய்! இது யதார்த்தம். ஆனால், நீ தலைவாரிப் பூச்சூடி, காஞ்சிப்பட்டுடுத்தி கஸ்தூரிப் பொட்டு வைத்து தேவதை போல் வெளியே வருவதையே கற்றோரும் மற்றொரும், சான்றோரும் எதிர்பார்க்கின்றார்கள். இது பலர் உனக்குச் சொல்லத் தயங்கும், ஆனால் சொல்ல விரும்பும் உண்மை - இவ்வடிவில் நீ வருவாயேயானால், உன்னை நாம் சிரம் தாழ்த்திக் கரம் கூப்பி வணாங்கி வரவேற்கத் தயாராக இருக்கின்றோம்! வருவாயா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதாப் பிரசங்க மரபு

அருள் மொழி அரசு, கலாபூஷணம்
சின்னத்தம்பி ஸ்ரீதயாளன்

**(இசைப்பாரம்பரியத்தில் இத் தெய்வீகக் கலையின் பங்குபணி – ஒரு கண்ணோட்டம்)**

**பா**டல்களைப்பாடிக்கதைசொல்லிமகிழ்விக்கும்மரபுஎன்பதுஇந்திய தமிழ்த் தேசங்களிலும் இலங்கையிலும் காலங்காலமாக வழக்கிலிருந்து வந்திருக்கின்றது. கதாகாலசேபம் என்கின்ற தொன்மையான, இசைப் பாடலோடு கதை சொல்லி மக்களை மகிழ்விக்கும் கலையானது இசைப்பாரம்பரிய வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றி வந்திருக்கின்றது. கதாப்பிரசங்கம் என்றும் இசைச்சொற்பொழிவு என்றும் சங்கீத உபந்நியாசம் என்றும் அழைக்கப்படும். ஹரிகதை செய்யும் இந்தக் கலைமரபு பற்றி ஆராய்ந்து பார்ப்போமானால் அதற்கான தொடக்கத்தை பதினெண் புராணங்களிலொன்றான பாகவதபுராண காலத்திலிருந்து காணமுடிகிறது. சுகமகரிஷிதியானவர் பகவானின் மகிமைகளை கையிலேந்தும் யாழிசையோடு பாடல்களால் எடுத்தியம்பியதாக அறியக்கிடக்கின்றது. பத்மபுராண வரலாறு அதற்கொரு உதாரணமாகும். லவகுசர்கள் எனப்படும் ஸ்ரீராமனின் குமாரர்களே தம் தந்தையின் முன்னிலையில் கதை சொன்னார்கள் என்ற பூர்வீக செய்தியொன்றும் இருக்கிறது. சுகமகரிஷிதியானவர் தாளம், மிருதங்கம், வீணை சகிதம் ஹறி கதையாற்றினார் என்பது பிரசித்தம்.

கதை சொல்லி மற்றவர்களை மகிழ்விக்கும் முறைமை பின்னர் அற்புதமான கலைமரபாக இந்திய தமிழ் பாரம்பரியத்திலும் இலங்கையிலும் நெடுங்காலமாக வழக்கிலிருந்தது. சிறுபிள்ளைகளுக்கு சமூக சமய நீதிக் கதைகளை அறிவூட்டுதலுக்காகவும் பொழுது போக்குக்காகவும் அன்றி அவர்களை நித்திரை செய்யப் பண்ணுவதற்காகவும் அம்புலிமாமா நிலாக்கதை சொல்லும் பாட்டிமார் தாத்தாமார் அவற்றை இனிய சந்தப் பாடல் வடிவில் பாடி மகிழ்வூட்டினர். இக்கதைகள் படிப்பினைகளை அடக்கியதாகவும் சிறுவர்களுக்கு மகிழ்ச்சியூட்டுவனவாகவும் அமைந்திருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியொருவர் இசைப்பாடல்கள் சகிதம் பிற்பாட்டு மத்தளம் தாளம் வீணை போன்ற வாத்தியங்களின் உதவியோடு அற்புதமான கதைகளைப் பொதுமக்கள் பயன் பெறுமாறு மகிழ்ச்சிக்காகச் சொல்லும் முறைமையே இதுவாகும். இயலும் இசையும் மாத்திரமன்றி நாடக உத்திகளும் இக் கதை செய்தலின் போது கையாளப்படும். எனவே இது ஒரு முத்தமிழும் விரவிய ஒரு ஆற்றுக்கலை எனப்படுகிறது.

தொடக்ககாலங்களில் ஹறி கதை என்றே அழைக்கப்பட்ட இக் கதாபிரசங்க கலையானது மக்களை வெகுவாக கவர்ந்தமைக்கு காரணம். வீரசாகசக் கதைகளையும் சமூக விழிப்புணர்வூட்டும் தகவல்களையும் மாத்திரமல்ல புராண இதிகாசக் கதைகளையும் கதை செய்த பாகவதர்கள் அற்புதமாக மக்களுக்கு இசைநயம் குழைத்து எடுத்துரைத்தமையே ஆகும்.

அரச மாளிகைகளில் மன்னர்களுக்கு இன்பமூட்டும் நோக்கோடும், கால ஷேபனத்துக்காகவும் பயன்பட்ட இக்கதைசொல்லும் முறைமையானது பின்னர் கோவில்களிலும் பொதுமக்கள் கூடுமிடங்களிலும் பௌராணிகமரபாக இடம்பெற தொடங்கியது. இக்கதை சொல்லும் முறையில் கவரப்பட்டும் கதையினிடையே பாடப்படும் இசையினால் ஈர்க்கப்பட்டும் ஹறிகதை செய்தல் எனப் பொதுவாக அழைக்கப்பட்ட இசைப்பிரசங்க கலைக்கு பொதுமக்கள் அமோக ஆதரவு வழங்கி போற்றத் தலைப்பட்டனர். தமிழிசைத் துறை வளர்ச்சியிலும் இக்கலையின் தாக்கம் தமிழகத்திலும் இலங்கையிலும் பெருகிய சங்கீத இசை ஞானம் பெற்றிருந்தவாகளில் சிலர் புராண இதிகாச வரலாறுகளையும் வீரசாகசக்கதைகளையும் உண்மைச் சம்பவங்களையும் சுவாரஸ்யமாக கதையாகச் சொல்லுவார்கள். அப்போது இடையிடையே இனிய இசையோடு சந்தப் பாடல்களையும் பாடி நகைச்சுவையோடு உரையாடி மற்றவர்களை மகிழ்வித்து வந்தனர். மக்கள் இக்கதைகளை மனங் கொண்டு அனுபவித்து அறிவுதேடுதலோடு பயன் அடையும் பாங்கில்பொருத்தமான பாணியில் கதை செய்யலாயினர்.

கதாப்பிரசங்கமென்னும் இக் கதாகாலஷேப கலையை ஆற்றுகை செய்யும் ஒருவர் சரளமாகக் கதை சொல்லக் கூடிய வகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்றொழுக்கான மொழிநடையும் இசைத்திறனும் நகைச்சுவை கலந்து உரையாடும் திறமையும் கொண்டவராக இருப்பார். அதுமட்டுமன்றி அவரிடம் நல்ல புராண இதிகாச இலக்கிய அறிவும் இருக்க வேண்டும்.

கதை செய்யும் காலஷேபக்கலைஞர் ஒருவர் இரசனைக்கு பொருத்தமான கதைகளை தெரிவு செய்யவும் அவற்றை சாஹித்திய வடிவில் அமைத்துத் தரவும் அக்காலத்தில் சாஹித்திய கர்த்தாக்களும் தேவைப்பட்டன. ஹரிகதை செய்யும் ஒருவருக்கு இச் சாஹித்தியங்களும் கீர்த்தனங்களும் கதைகளை நகர்த்தி செல்ல உதவின. இவ்வாறான ஆரம்ப கால சாஹித்தியகாரர்களுள் பெயர் பெற்றவர்கள்தான் கோபால கிருஷ்ணபாரதியார் (1865) வேலூர் சுப்பராய முதலியார், குமாரசாமி முதலியார், திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை போன்றவர்கள் ஆவர். இலங்கையிலும் சமகாலத்தில் இச்சாஹித்தியங்கள் கதைகளாகச் செய்யப்பட்ட போதிலும் பிற்காலத்தில் பிரசங்கக்கலைஞர்களாக விளங்கியவர்கள் தாமே கீர்த்தனைகளையும் சாகித்தியங்களையும் படைக்கும் வல்லுனர்களாகவும் திகழ்ந்ததை அறியமுடிகிறது.

ஹரி கதை வளர்ச்சி வரலாற்றை நோக்குகையில் மராத்தி தெலுங்கு மொழிகளில் பிரபலம் பெற்ற இம்மரபு ஹிந்தி மொழியிலும் சமஸ்கிருதத்திலும் தமிழ் மொழிகளில் மாத்திரமல்லாது மற்றைய திராவிட மொழிகளிலும் மேலாக ஆங்கிலத்திலும் வளர்ச்சி பெற்ற வரலாறு சுவாரஸ்யமானது. ஹரிகதை செய்பவர்கள் பொதுவாக பாகவதர்கள் என அழைக்கப்பட்டார்கள். ஹரிகதை என்னும் போது அது நாராயணனின் வரலாறுகள் என்ற நினைப்பே எமக்கு வரினும் சிவனின் பெருமைகளைக் கூறும் சிவபுராணக் கதைகளை கூறும் ஆற்றுகைகள் கூட ஹரிகதை என்றே அழைக்கப்பட்டது.

## ஆற்றுகை செய்தல்

ஹரிகதைகளை அரங்குகளில் ஆற்றும் போது பிரசங்கி பலர் பஞ்சகச்சமாக வேட்டியை உடுத்தி மார்பின் குறுக்கே ஒரு அங்கவஸ்திரத்துடன் கையில் சிப்ளாக்கட்டையும் காலில் கஜ்ஜையுடனும் ஒரே இடத்தில் நின்றபடி கதை செய்யும் முறைமை சுவாரஸ்யமாக இருக்கும். மராத்திய கதாகாலட்ஷேபகர்கள் கடைப்பிடித்த இம் முறைமை தமிழ்நாட்டிலும் இலங்கை சங்கரசுப்பையர் காலத்திலும் நடைமுறையிலிருந்தது. பாகவதர்கள் கையில் தாளம் - சிப்ளாக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டையுடன் கப்னி என்ற நீண்ட அங்கியும் தரித்து போடா என்னும் தலைப்பாகை, காலில் கஜ்ஜையுடன் மேடையில் தோன்றும் முறைமை தமிழில் ஹரிகதை ரசிகர்கள் மத்தியில் வரவேற்புப் பெறவில்லை. தஞ்சையின் கடைசி மராத்திய மன்னனான சிவாஜி (1855) இல் இறக்கும் வரை செல்வாக்குப் பெற்றிருந்த முறைமை கீர்த்தன்கள் தமிழகத்தில் ராம்சந்திரபாலாவுக்கு பிறகு தஞ்சாவூர் பட்டிகிருஷ்ணபகவதர் காலம் முதல் புதிய பரிமாணத்தில் வளரலாயிற்று. இந்த வகையில் தமிழில் ஹரிகதை மரபின் முன்னோடியாக பட்டிகிருஷ்ணணயரே போற்றப்படுகிறார்.

மேலும் ஹரிகதை மரபில் கதாப்பிரசங்கியார் அரங்கில் அமர்ந்தவுடன் முதலில் பஞ்சபதி நாமவளித்தாய்தம் பூர்வபீடிகை போன்றவற்றோடு ஆரம்பிப்பதே முறைமையாக கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. இந்த மரபானது காலப்போக்கில் மாறுபடத் தொடங்கியது. பாகவதர்கள் ஹரிகதைகளை நின்றபடியே செய்தனர். தேவைக்கும் சந்தர்ப்பத்திற்கும் ஏற்ப மேற் சொன்ன பாணி செல்வாக்கு இழக்க, கதாப்பிரசங்கிமார் மேடையில் அமர்ந்திருந்தே செய்யலாயினர். இம்முறைமை பக்கவாத்தியங்களாக அணி செய்யும் பிற்பாட்டுக்காரர் வயலின் ஆர்மோனியம் மிருதங்கம் கஞ்சிரா முகர்சங்கு உடுக்கு ஆகிய கருவிகளை வாசிப்போருக்கும் அனுசரணையாக அமையலாயிற்று. பிற்காலம் வரை இசைப்பேருரைகள் நிகழ்த்தி வந்தவர்கள் கோபால பாகவதர் வைத்தியநாதையர் திருமுருக கிருபானந்த வாரியார் போன்றோரும் பக்க வாத்தியங்கள் பின்னால் மேடையில் அமர்ந்து வாத்தியமிசைக்க நின்று கொண்டே கதை செய்தார்கள்.

கதாகாலஷேபம் என்னும் ஹரிகதை செய்யும் முறைமையின் பிதாமகராக தஞ்சாவூர் பட்டிகிருஷ்ணஐயர் (1857 – 1903) ராம்சந்திரபாவா என்பவரே குறிப்பிடப்படுகிறார். இவரைத் தொடர்ந்தே எம்பார்ரங்காச்சாரியார் சித்தூர் சுப்பிரமணியபிள்ளை, எம்பார் விஜயராகவாச்சாரியார், சூலமங்கல வைத்தியநாதஐயர், மோர்கங்கார் சாமசுப்பிரமணியசர்மா, சாரதாம்பாள் உட்பட பல ஹரிகதைக்காரர்கள் இக்கலையை மெருகூட்டி வளர்த்தெடுத்தார்கள் என்று அறிய முடிகிறது. பொதுவாக சங்கீத ஞானமுள்ள வித்துவான்களினால் தமிழ்நாட்டில் கையாளப்பட்ட இக்கலை மரபு காலவளர்ச்சியில் பேராசிரியர்கள் புலவர்கள் ஆனோரால் ஆற்றுகை செய்யப்பட்டு பேணப்பட்டு வந்திருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்நாட்டில் தஞ்சாவூர்தான் தமிழில் கதாப்பிரசங்க மரபு வளர களம் அமைத்த பதியாகக் காணப்படுகிறது.

ஏடுகாத்த கிழவர் எனப்படும் டாக்டர் உ.வே.சாமிநாதையர் கூட அற்புதமான ஒரு புராணப்பிரசங்கியாக விளங்கியிருக்கிறார் என்பதை அவரின் "என்சரிதம்" என்ற நூலில் காணமுடிகிறது. அதனைத் தன் ஜீவனோபாயமாகச் செய்திருந்தமை பற்றிக் குறிப்பிடும் உ.வே. சாமிநாதையர் தம் நூலில் சைவப்பிரசங்க முறைமையில் தவிர்க்க முடியாதமை கல்லான இலங்கையின் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் புராணப்பிரசங்கத்தைக் கையாளுகை முறை பற்றி கிலாகித்துள்ளார். தமிழ்நாட்டில் இசை சிறப்பாக வாணர்களால் மதித்துக் கையாளப்பட்டதும் ஜீவனோபாயத்துக்கும் புகழுக்கும் காரணமாயிருந்ததுமான ஹரிகதை அல்லது கதாகாலஷேப முறைமையானது இலங்கையிலோ பக்தி மார்க்கத்தை வளர்க்கும் நோக்கத்தையே முதற்கருதுகோளாகக் கொண்டிருந்தது.

திருமுறைகளைப் பண்முறை வழுவாது பாடியும் இறையருட்பாடல்களையும் கீர்த்தனைகளையும் நெஞ்சுருகி இசைத்தும் புராண இதிகாசங்களைப் பிரசங்கிக்கும் மரபே நல்லூர் யாழ்ப்பாணம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானால் தொடக்கப் பெற்றது. பக்க வாத்தியங்களும் மேலதிக இசைக் கருவிகளும் சைவப் பிரசங்க முறைமைக்கு அணி செய்யக் கூடியவையாகிலும் அவை மக்களின் பக்தி பரவசத்தையும் சமயஈடுபாட்டையும் திசை திரப்பிவிடக் கூடாத படி இருக்கப் பார்த்துக் கொள்ள வேண்டுமென நாவலர் கருதியிருக்கலாம். மேலும் இப்பிரசங்கங்கள் லோபோகாரமான முறையில் செய்யப்பட வேண்டுமென்பதிலும் நாவலர் உறுதியாயிருந்தார் என்பது இங்கு நோக்கத்தக்கது.

இத் தெய்வீக கலைவளர்ச்சி தொடர்பில் மிகப் பிரகாசித்ததுடன் இலங்கையில் திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனமொன்றையும் 1966 களில் ஸ்தாபித்து கதாப்பிரசங்க முறைமையும் அக்கலையின் தெய்வீகத்தையும் கலந்து வளர்த்தவர் என்ற வகையில் "முத்தமிழ்மணி" சி. எஸ். எஸ். மணிபாகவதர் எனப் பெயர் பெற்ற நல்லை ஆதீன கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிய பரமாசாரிய தம்பிரான் சுவாமிகள் பிரதானமானவர். இலங்கையில் சங்கீத கதாபிரசங்க மரபானது உடுவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசியும் பின்னர் கீரிமலையில் ஆசிரமமைத்து வாழ்ந்து சங்கீத உபந்நியாசகர்களுக்கு முன்னோடியாக விளங்கியவருமான பாகவதர் சங்கர சுப்பையர் காலத்தில் ஆரம்பம் பெறுவதாகக் கூறப்படுகிறது. குருமணி சி.எஸ்.எஸ். அவர்களின் குருவாகவும் விளங்கி அவரை அரங்கேற வைத்தவரும் சங்கர சுப்பையரே என்பர். இவருக்குப்பின் கதை செய்தல் மரபு இலங்கையிலும் அக்கறையோடு பேணப்பட்டு வந்த வரலாறுகள் உண்டு.

தகவல்கள் பெற்ற அளவில் கீரிமலையில் ஆசிரமம் அமைத்து ஹரி கதைகளை இனிய இசைப் பிரசங்கங்களை ஆற்றி சமயம் வளர்க்கும் பணியில் சங்கரசுப்பையர் குறிப்பிடத்தக்கவராவார். இவரைப்போல சங்கானை நாகலிங்கப் பரதேசியார், இவரின் மாணவர் "இசை வல்லாயர்" குப்பிளான் செல்லதுரை, மாணிக்கத் தியாகராஜர், நல்லூர் முத்தமிழ்மணி சி.எஸ்.எஸ். மணிபாகவதர், கொக்குவில் குமாரசுவாமி புலவர், இணுவை தியாகு, வேலுப்பிள்ளை சிவஞானம், வடிவேல்சுவாமி, தாவடி ஆறுமுகம், குமாரசாமி, உடுவில் இசைப்புலவர் என். சண்முகரத்தினம், வட்டுக்கோட்டை ஆசிரியர் அளவை, பொன்னம்பலம் கு.குருசாமி, இணுவை வடிவேல்சுவாமி மட்டக்களப்பு டாக்டர் இரா.சிவ அன்பு, அளவையூர் அருட்கவி வினாசித்தம்பி, சிவ. வை. நித்தியானந்த சர்மா, சு. கணேசசுந்தரம், கொக்குவில். சின்னத்தம்பி ஸ்ரீதயாளன், திருமலை பண்டிதர் வடிவேலு, அளவை வர்ணகுலசிங்கம், சிவ. சண்முகமூர்த்தி, கனகசுந்தரம், மட்டுநகர் சாம்பசிவம், ராசலிங்கம், நாக பரமசாமி, பொன். தெய்வேந்திரம், கனக. நாகேஸ்வரன் ஆகியோரைக் குறிப்பிடலாம்.

நிறைவாக, யாழ் நல்லூரிலே சி.எஸ்.எஸ். மணிபகவதராயிருந்து ஆதீனமுதல்வராகி அருட்தொண்டாற்றிய தம்பிரான் சுவாமிகளே தன் சுயசரிதையாக எழுதிய நூலிலிருந்து பெற்ற சில குறிப்புகளை இங்கு தருவது பொருத்தமாயமையும் (ஆதீன புதிய கட்டட திறப்பு விழா வெளியீடு 2004) பக்கம் -60)

1. சிறுவனாயிருக்கும் போதே நான் கதை செய்வதைப் பார்த்து பாராட்டியவர்களும் விமரிசித்தவர்களும் இருந்தார்கள். எவ்வாறெனினும் என் கதைகளை எல்லோரும் கருத்தோடு கேட்டதும் இன்னும் அபிவிருத்தி செய்யும்படியும் உற்சாகமளித்தார்கள். ஆளின் உருவத்துக்கு மதிப்புக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்கும் இவ்வுலகில் கருத்தை கவனிப்போர் அபூர்வம் சிறுவயதில் நான் செய்த கதைகளை கேட்டு "பையன் பக்குவப்படவில்லை பண்படவில்லை" என்று கருதியவர்களுமிருந்தனர்.

2. அரங்கேற்றம்: சிவன் கோயில் தர்மகர்த்தா பொன்னுச்சாமி செட்டியாரவர்கள் என் வளர்ச்சிக்கு வித்திட்டவர்களில் ஒருவர் சிறுவனாயிருந்தும் எனக்கு தகுந்த விளம்பரம் செய்வித்து சிறந்த பக்கவாத்தியங்களை ஏற்பாடு செய்த அவரே மாலையிட்டு என் கதையை ஆவணி மூல தினத்தன்று சிறந்த முறையில் அரங்கேற்றி வைத்தார். என்றும் "பிட்டுக்கு மண்சுமந்த கதை" செய்தேன் பெருங்கூட்டம் வந்திருந்தது. அன்று என் தாத்தாவும் (திரு.கணேசையர்) மறைவாக இருந்து கவனித்தார். கதை முடிந்ததும் எனக்கு பாராட்டு மொழிகள் வாசித்தார்கள் வெற்றி வீரனாக வீடு வந்து சேர்ந்தேன். அனுபவமாகிய ஒரு சுவாரஸ்யமான குறிப்பு: வீட்டுத் திண்ணையில் என் தாத்தா இருந்தார். என்னை அழைத்தார். அருகில் போனேன், நறுக்கென தலையில் ஒரு குட்டுப் போட்டு என்னையும் என் கதையையும் இகழ்ந்து பேசி "கதையில் பாண்டியன் கொடுத்த பரிசை சிவன்சவுக்கினால் ஏற்றதைச் சொல்லாமல் விட்டாயே. இப்படியா கதை செய்வது" என வைதார். என் குறைகளை திருத்திக் கொடுத்தார் கற்றது கைம்மண்ணளவு தான் என்பதை உணர்ந்து மேலும் ஆய்வு வேலையில் இறங்கி தமிழின்பத்தில் திளைத்தேன்.

கதாப்பிரசங்கக்கலை வளர்க.

**சிரியுங்கள் உலகம் உங்களுடன் சேர்ந்து சிரிக்கும், அழுங்கள் நீங்கள் ஒருவர்தான் தனித்து அழுது கொண்டிருப்பீர்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எட்டாம் வகுப்பின் எட்டாத நினைவுகள் யாழ் இந்து மகளிர் கல்லூரி 1950ல்

ஆக்கம் - செல்வி சரஸ்வதி தம்பிப்பிள்ளை

**விநாயகர் துதி**

மாய உலகில் மாயையாகியும்
தெய்வ உலகில் தெய்வமாகியும்
அணுவிற் கணுவாய் ஐம்பூதமாகியும்
ஏத்தினார் உளத்தில் எழுந்தருளியும்
ஞானம் நல்கும் ஞான மூர்த்தியும்
விக்கின விநாயகர் விரைகழல் காப்பு.

**ஆசிரியப்பா.**

அன்பும் அழகும் அணிபெறவுண்டு
புத்தியும் சித்தமும் நிறைந்த
கல்வியிற் சிறந்த காரிகைகள் பலர்
இதயம் நிறைய இன்பமளிக்கும்
இசையை இசைக்கும் இரத்தினாவெனும்
இளையாள் ஏற்றமுடன் திகழ்வாள்
கல்வி கலைகளில் கம்பனை வென்றிடும்
காரிகை நாமம் வியந்திட வைக்கும்
சக்தியின் நாமம் சற்சொரூபவதி எனும்
பெயரை உடைய பெருந்தகையாளாய்
சுருண்ட கூந்தல் தோகையாளின்
திறமையைக் கண்டு வியப்பர் யாவரும்
இன்னும்
சகல கலா வல்லியின் நாமமுடையாா்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரிமூர்த்தியர் தேவியர் போன்றார்
சரஸ்வதி அவர்தம் நாமமாகும்
மும்மூர்த்திகளில் முதல்வன் போன்ற
சாந்த குணவதி சரஸ்வதி என்பாள்
வகுப்பில் தலைவியாய் வண்ணமாய் திகழ்வாள்
அன்பு மொழியால் அடக்குவாள் பெண்களை
சிறிதும் சத்தம் செய்ய விடாளவள்
பிள்ளைகள் பலரால் போற்றப்படுவாள்
செந்தமிழ் சிறிது தெரிந்தோர் இருவர்
பாடலில் சிறந்த பாவையள் ஒருவர்
அன்னப்பிள்ளையென அன்புடன் அழைப்பர்
ஆசிரியர்கள் அன்புடன் நோக்கும்
சிறுமியராயினும் திறமையிற் சிறந்தவர்
திகழ்வர் முன்வரிசை தன்னில்
மேரியென்பாள் மிகவும் நல்லவள்
தேவமணியை சிறக்க சொல்லலாம்
சொர்ணமென்னும் நாமமுடையாள்
சித்திரக்கலையில் ஒப்புயர்வற்றவள்
சிரிக்கச் செய்வதில்திறமையுடையாள்
அன்னமென அழைப்பர் அன்பாய் யாவரும்
மோகனம் புரியும் மோகனராணி
நாட்டிய ராணி நளின சிங்காரி
பரதநாட்டியம் பண்புடன் ஆடினால்
காண்பவர் யாவருக்கும் கண்கொளா விருந்தாம்
சிவம் சிவமென்று சிந்திக்கச் செய்வாள்
இளகிய மனத்தாள் இன்புற பேசுவாள்
சிவமும் யோகமும் சேர்ந்ததே அவள் பெயர்
இன்னும் இன்னும் எத்தனை பேருளர்
அவரிடத்தகலா அளவிலாப் பெருமையை
எண்ணிப் பார்க்கலாம் எழுத முடியுமோ
மாணவியரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூங்கு மூஞ்சிகள் கெஞ்சினும் கிடையார்
அச்சமென்பதே அவர்தம் அகராதியில்
இச்சையாய்த் தேடினும் எளிதிற் கிட்டா
பொறாமை என்னும் பொல்லாக் குணந்தனை
பேய் போல் ஓட்டுவர் பெண்கள் யாவரும்
பாடங்கள் யாவும் பாங்குடன் படிப்பர்
சித்திரப் பாவையி னகத்த கவடங்கி
செவி வாயாக நெஞ்சு களனாக
பசித்தவன் சாதம் உண்பது போலவும்
தாகத்தால் தவித்தவன் தண்ணீர் பருகுமாப்போல்
கல்வியென்னும் கருத்திற் கரியதை
அத்தனை பேரும் ஆர்வுடன் கேட்பர்
ஏற்றியுஞ் சொல்லார் போற்றியுஞ் சொல்லார்
ஏனெனில்
பெண்கள் யாவரும் பெருமை யெய்துவர்
கர்வமென்பது கடுகிப் பிடிக்கும்
தம்மிற் சிறந்தவர் தரணியில் இலையெனத்
தற் பெருமை தலைவிரித்தாடும்
இன்னும்
மாணவிகள் மான்பு தனதேயென்று
கருதும் கனவிலும் உடையார்
பிள்ளைகள் யாவரும் ஏற்றிபட போற்றுவர்
சமஸ்கிருதத்தில் சரிநிகரற்றவர்
விருப்புடன் பாடம் வியக்கச் சொல்வார்
கந்தையா வென்றார் கலங்குவர் நெஞ்சம்
கண்டிப்பில் சிவகாம சுந்தரி யெனினும்
கனிவுடை நெஞ்சம் கொண்டவர் அவரே
எட்டாம் வகுப்பு ஆசிரியை ஆகும்
முத்தமிழ் தன்னில்முதன்மை உடையாரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம்மிடந் தன்னில் தாங்கி யுடையது
முப்பிரிவாகும் மும்மணிகளிலும்
இரத்தினமாக எழில் பெற்றுள்ளது.
எதுவென வினாவில் எமது J.S.C.'A'
சுற்றுப் புறமும் சுவரையுடையது.
அடா மழையெனினும் அலங்கரித்திருக்கும்
அணி அணியாக ஆசனம் பலவுள
தூய வடிவே உடைமையாய்க் கொண்டது
தூசிகளற்று தூய்மையாய் இலங்கும்
முப்பது பேரை தன்னகத் தடக்கும்
மாணவர் அறிவை மாண்புடன் விளக்க
"சாட்ஸ்" எல்லாம் தலைதூக்கி நிற்கும்
சரித்திர காலச் சம்பவம் பகர
சரித்திர அட்டைகள் தலைகாட்டி நிற்கும்
களிப்புடன் மாணவர் கற்கைக்குதவ
கரும் பலகை இரண்டு பக்கமும் இடம் பெறும்
கூடையொரு பால் கூட்டுமாறொருபால்
துடைப்பம் ஒருபால் தூய்மையாய் இருக்கும்
ஆசிரியர்க்கான உபகரணம் யாவும்
ஒழுங்காய் ஓர்பால் இடம் பெற்றிருக்கும்
எள்ளென முன்னர் எண்ணெய் கொணரும்
வகுப்புத் தலைவி வாணி சரஸ்வதி
எல்லாவற்றையும் ஒழுங்காய்ச் செய்வாள்
இத்துணை சிறப்பு இயல்புடைத்தாயினும்
தண்மையுடனே தயங்கும் மதியிலும்
குற்றமுண்டென்று கூறுவர்' சிலர்
வகுப்பில் ஓர் குறை வகையாயுண்டு
உத்திரத் திசையில் ஒரு பால் வீசும்
உக்கிரக் காற்று உடலை உடமையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருங்கே சிதறிப் பறக்கச் செய்யும்.
சகிக்க வொண்ணாது சாற்றவொண்ணாது
தலைவலி தன்னைத் தந்து உலுப்பும்
இதனைத் தவிர இன்னோர் குறையில
இத்தனை மாண்புடன் இலங்கும் எம் வகுப்பு
இந்து மகளிர் கல்லூரியில் இணையிலாது
புகழுடன் விளங்கும் பெண்கள் கல்லூரி
பூத்துக் குலுங்கி புதுமை பயக்கும்
எங்கே
இயற்கை அன்னை எழில் பெற்றிலங்க
செயற்கை எழிலும் சேர்ந்தே விளங்கும்
வளமுடன் திகழும் வண்ணார் பண்ணையில்
வாழ்க எம் கல்லூரி வளமுடன் வாழியவே

"ஓம்"

## பெரியோரைப் பற்றிக் கொள்

பலமற்ற கொடியானது உயர்ந்த மரத்தைச் சுற்றிக் கொண்டு வானம் வரை உயர்கிறது. மரத்தைப் பற்றிக் கொள்ளவில்லை என்றால் மண்ணில் படர்ந்து காலினால் மிதிபடுகின்றது. கல்லைத் தண்ணீரில் போட்டால் மூழ்கிவிடுகிறது. அதே கல்லை கட்டையால் செய்யப்பட்ட படகின் மேல் வைத்தால் மிதந்து செல்கிறது. அதைப்போல் நம்மைவிட அறிவிலும், ஆற்றலிலும் பெரியோர்களைப் பற்றிக் கொண்டால் நாமும் உயர்வடையலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இமய மலைச் சாரலிலே

திருமதி ஞானேஸ்வரி ஞானசேகரம்
பழைய மாணவி
யாழ் இந்து மகளிர் கல்லூரி

"அவனின்றி ஓர் அணுவும் அசையாது" என்ற பழமொழிக்கிணங்க, எண்ணத்தால் மட்டுமே காண முடிகின்ற 'பரம் பொருளை" அதனை செயலாக்குவது இறைவன் திருவருளே! இமய மலையில் நான் திருக் கைலாயம் சென்று வந்த அந்த அற்புதக் காட்சியை, என் அனுபவத்தை மற்றவர்களுக்கு அறியத் தருகிறேன்.

நான் அங்கு செல்லவில்லை. அந்த சத்தியநாராயண "பாபாவே" என்னை அங்கு அழைத்தார். அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை. என்றால் முற்றிலும் உண்மை "திருக்கைலாயம்" ஈசனுடைய இருப்பிடம் அங்கு சென்றால் நாமும் கைலாயத்திலேயே இருக்கின்றோமோ என்று தோன்றும் அது தான் சுவர்க்கம் என்று நினைத்தேன். ஏனென்றால் அவ்வளவு ஒரு சந்தோஷம் மனதுக்கு ஒரு இதம். ஒரு குளிர். ஒரு இன்பம் ஏனென்றால் பத்து நாட்களுக்கு சாப்பிடாமல் இருந்தாலும் நன்றாக சாப்பிட்ட மாதிரி ஒரு அனுபவம் அவ்வளவு தைரியம் பலம் சந்தோஷம் மகிழ்ச்சி என்று சொன்னால் மிகையாகாது இந்தக் காட்சியை கண்டேன் கைலைத் தரிசனம், எனக்குபெரும் புண்ணியமும் வாய்ப்பும் கிடைத்தது. எத்தனையோ பேர் முழு நம்பிக்கையோடும் புறப்பட்டாலும் ஏதேதோ ஒரு காரணத்தால் பலருக்கு அந்த தரிசனம் கிட்டாமல் போகலாம்.

திருக்கைலாயம் சென்று வந்து சில ஆண்டுகளாகிவிட்டாலும் நேற்றுத்தான் அங்கு சென்று வந்தது போன்ற ஓர் உணர்வோடு அந்த ஆனந்தத்தை சிலிர்ப்பை சுவாசத்தை வெளிப்படுத்தி பரவசத்தோடு சொல்கிறேன். கடவுளைத் தேடுவதிலும் அப்படிப்பட்ட ஓர் உணர்வு இருந்தால் தான் நிச்சயம் பார்க்கலாம் என்று அபிராமிப்பட்டர் கூட சொல்லி இருக்கிறார். அவன் அருள் வேண்டும் அதையும் மிஞ்சி நான் கண்டேன் வெள்ளிப் பனி மலை திருக்கைலாயம் தரிசனத்தை தான் வேண்டிப் போகும் போது எவ்வளவு சந்தோஷம் இப்படியும் ஒரு இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டா? திடீரென மாறிடும் பனிப் பொலிவு மேகமூட்டம் இருள் இப்படி பல காரணங்களால் கயிலைமலைக்கு மிக நெருக்கமாக போன பின்பும் அந்த தரிசனம் கிடைக்காமல் போகலாம். இப்படி பல காரணங்களால் பார்க்காமல் போவது உண்டு எனக்கு கிடைத்தது கையிலை தரிசனம்.

இங்கே இன்னுமொரு அற்புதம். பஞ்சபூத வடிவான காட்சியை கை தொடும் உயரத்தில் இருக்கிற மாதிரி காட்சி தருகிற ஆகாயம் பரந்து விரிந்து முன்னால் காட்சி தருகிற மாதிரி நிலம் நதி சுகமாக வீசும் காற்று கடல் மட்டத்தில் இருந்து பல் ஆயிரம் அடிகளுக்கு மேலாக சூரியனுடைய ஒளிக்கதிர்கள் கையிலையை உருகச்செய்கிறது. அடடா! எத்தனை அற்புதம் எத்தனை அழகு இன்னமும் சொல்ல வேண்டுமா? கையிலை பனி மலையாக இருந்தாலும் எப்படி ஜோதி வடிவாகக் காட்சியளிக்கிறது என்று கேட்பார்கள் காலை முதல் மாலை வரை சூரியக் கதிர்கள் படுவதால் நிறம் மாற்றம் ஏற்பட்டு அழகான நிறங்களோடு காட்சியளிக்கிறது. அது தான் வெள்ளி மலை. இமயமலையில் இவ்வளவு காட்சி இருக்குமா? அற்புதம் சந்தோஷம். மகிழ்ச்சி ஒரு இன்பம் கண்ணாரக் கண்டேன் கையிலையின் தரிசனம் அற்புதம் அற்புதம் எனக்குப் பெரும் வாய்ப்பும் புண்ணியமும் கிடைத்தது. என்று சொன்னால் மிகையாகாது. இதைக் கண்டவர்க்கு மறு ஜென்மம் கிடையாது என்று ஒரு ஐதீகம்.

அழகு பொருந்திய இமயம். எங்குமே இமயம் தான். உத்தர காண்டத்தில் காணுகிற இமயத்தில் அழகும் பகீரதி கங்கையின் அழகும் தன்னிகரற்றது. புனிதம் நிறைந்தது. புலன்களுக்கு அப்பாற்பட்டது.இந்த அழகும் தெய்வீகத்தன்மையும் புனித யாத்திரையை மேற் கொள்பவர்கள் உள்ளமும் உடலும் தூய்மை பெற்று திரும்புகிறார்கள். வாருங்கள் நீங்களும் இந்த யாத்திரையை மேற் கொள்ளலாம். குதிரை, பல்லக்கு கெண்டி கூடை என்றும் விரும்பியவற்றில் செல்லலாம்.

கங்கை நீர் அருந்துதல், கங்கையை பூஜித்தல் "ஹே கங்கைத் தாயே பகீரதி உலகத் தாயே ஜடா சங்கரியே" என்று கூறி கங்கா தேவியை துதித்தல் ஆகியவற்றால் தூய்மை பெற்று பெரும் பேறும் இங்கு கிடைக்கக் கூடியது கங்கை எல்லா இடத்திலும் கங்கை தான். அழகு பொருந்திய இமயம் தான் மேலே போகப் போக வியப்புறச் செய்யும் மலையுச்சிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகடுகள் பனிப்பாய் விரித்தது போல் பள்ளத்தாக்குகள் பச்சை வனங்கள் இந்தப் பகுதியில் நிறைய இருக்கின்றன. குளிரும் அதிகம் ஆனபடியால் கையுறைகள் (gloves) காலுறைகள் (socks) (sweaters) தலைக்குத் தொப்பி குடி நீர் போன்றனவற்றை உடன் கொண்டு செல்ல வேண்டும் போர்வைகள் கம்பளங்களும் தேவைப்படும் கங்கை நதியில் ஸ்நானம் செய்து ஏகாந்தத்தில் பரமனை துதிக்கும் அனுபவம் இந்தப் புண்ணிய பூமியில் கிடைக்கிறது.

தார் சாலைகள் (வீதிகள்) ஆறுகள் மலைகள் எல்லாமே ஒன்றாகப் போய்க் கொண்டிருக்கும். வைஷ்ணவி குகைக்குச் செல்ல குதிரையில் தான் செல்ல வேண்டும். பதினாறு (16) கி.மீ மேலே போக வேண்டும். அங்கேதான் அம்மன் தரிசனம். கேதார்நாத் மலையில் சிவன் தார் சாலை வேறு பாதை. அதுவும் குதிரையில் தான் செல்ல வேண்டும். விருப்பமுள்ளவர்கள் கெண்டி கூடை பல்லக்கு என்று 18 கி.மீ போக வேண்டும் ஒவ்வொரு கோயிலுக்கும் வெவ்வேறுபாதை வழியாக செல்ல வேண்டும்.

இங்கு கங்கா "தசரா" என்ற விழா மிகவும் பிரசித்தி பெற்றது. கங்கா "தசரா" நாளில்தான் கங்கை தாய் முதன்முதலில் ஹரித்துவாரிலிருந்து தரையைத் தொட்டதாக நம்பப்படுகிறது. அதனால்தான் ஆண்டு தோறும் கங்கா "தசரா" சிறப்பாக கொண்டாடப்படுகிறது. சிவபிரான் இந்த நாளில் முதன்முதலாக கங்கையை தனது முடியிலிருந்து கீழே பாய விடத்தொடங்கினார் என்பது ஒரு நம்பிக்கை இங்கு கோடையிலும் கூட மிகவும் குளிராக இருக்கும் அதனால்தான் ஏப்பிரல் முதல் யூன் வரைக்கும் செப்ரெம்பர் முதல் அக்ரோபர் வரைக்கும் யாத்திரைக்கு ஏற்ற காலங்கள் ஆகின்றன. பின் மழைக்காலம் பனிக் காலம் ஆரம்பித்து விடும். இமயமலைச் சாரலிலே இசைபாடும் கங்கை என நீங்களும் ஏற்ற காலங்களில் திருக்கைலாயம் சென்று வரலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகன் பெருமை

தொகுப்பு — திருமதி விமலா மணிவாசகன்

### முருகனின் அவதாரம்

பரம் பொருளாம் சிவனின் நெற்றிக் கண்ணில் இருந்து தோன்றிய தீப் பொறியானது சரவணப் பொய்கையில் உள்ள ஆறு தாமரை மலர்களில் விழுந்து ஆறு குழந்தைகளானது. அக்குழந்தைகளை ஆறு கார்த்திகைப் பெண்கள் வளர்த்தார்கள். முருகனைப் பார்ப்பதற்காக சிவனும் சக்தியும் வந்தார்கள். ஆறு குழந்தைகளையும் பார்வதி தேவி ஒன்றாக அணைத்தார்கள். ஆறு முகமும் பன்னிரு கைகளுடனும் உலகம் உய்ய "ஆறுமுக" சாமியாக காட்சியளித்தார் முருகப்பெருமான்.

### முருகன் வழியாடு

முருகன் குறிஞ்சித் திணைக்குரிய தெய்வமாகப் போற்றப்படுகிறார். முருகனையே தனியாக வழிபட்டு வந்த சமயம் "கௌமாரம்" எனப்படும். இலங்கை இந்தியா மற்றும் தமிழர்கள் குடியேறிய வெளிநாடுகளிலும் இம்மூர்த்தியின் வழிபாடு நடைபெறுகிறது. முருகப் பெருமான், குழந்தைகளுக்கு குழந்தை வேலனாகவும், இளைஞர்களுக்கு பாலசுப்பிரமணியராகவும், கலைஞர்களுக்கு ஆறுமுகம் கொண்ட அண்ணலாகவும், வீரர்களுக்கு தேவசேனாதிபதியாகவும், மந்திரோப தேசம் பெற விரும்புபவர்களுக்கு சுவாமிநாதனாகவும், இல்லற வாழ்வினை மேற்கொண்டவர்களுக்கு வள்ளி தெய்வயானையுடன் சுப்பிரமணிய சுவாமியாகவும் பற்றற்ற தூய ஞான வாழ்வு நெறியாளர்களுக்கு பழனியாண்டவராகவும், அவரவர் விரும்பும் கடவுளாக காட்சி தருகின்றார்.

### முருகனும் தமிழும்

முருகன் தமிழ்க்கடவுள். தமிழே உருவாக விளங்குபவர். தமிழில் உள்ள முதல் எழுத்துகள் உயிர் பன்னிரெண்டு, மெய் பதினெட்டு அது போல முருகன் பன்னிரு கைகளும், பன்னிரு கண்கள் ஆறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுகங்கள் என முப்பது உறுப்புகளைக் கொண்டு விளங்குபவர். அத்துடன் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் தமிழை வளர்த்தவர்.

### முருகனும் நாமமும்

கந்த புராணத்தில் சூரனை வதம் செய்த நிகழ்ச்சியானது நம்முடைய மலங்களை அழிக்கின்ற நிகழ்ச்சியேயாகும். தாரகாசுரன் நம்முடைய கன்ம மலத்தை குறிக்கின்றான். கன்ம மலம் முதலில் அழியும் அதனால் தாராகாசுரன் முதலில் அழிந்தான்.

சிங்கமுகசூரன் நம்முடைய மாயா மலத்தை குறிக்கின்றான். மாயாமலம் அறிவை விளங்க வைக்கும் மயங்கவும் வைக்கும் அவ்வாறே சிங்கமுகசூரன் நல்லியல்பும் தீய இயல்பும் கொண்டவன். எனவே இரண்டாவதாக அழிந்தான்.

சூரபதுமன் நம்முடைய ஆணவ மலத்தை குறிக்கின்றான். ஆணவ மலம் ஆற்றல் கெடுமேயன்றி அழிவதில்லை. சூரபதுமன் தீய இயல்புகள் அழிந்து சேவலும் மயிலும் ஆக உருக் கொண்டு முருகப் பெருமானுக்கு தொண்டு செய்து அழியாத பெருநிலை பெற்றான். அஞ்ஞானத்தை ஞானமே வெல்லும் நம்முடைய அஞ்ஞானத்தை மெய்ஞானமாகிய முருகனின் அருள் வென்று பேரின்பப் பெரு வாழ்வைத் தரும்

### "ஓம் சரவணபவ" விளக்கம்

ஓம் - பிரணவம்
**ச**ர்வமானவன்
**ர**ம்மியமானவன
**வ**சீகரிப்பவன்
**ண**(ந)மசிவாய வடிவானவன்
**ப**ரம் பொருளானவன்
**வ**சந்தமானவன்

### ஆறுமுகமான பொருள்

பெரும் இருளாற் போர்த்து மறைக்கப்பட்ட உலகம் அந்த இருள் சிறிதும் இல்லாமல் விளங்கும் பொருட்டு பலவாகிய ஒளிக்கதிர்களை விரித்துத் தோற்றுவித்தது ஒரு முகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு நிறைந்த அடியார்கள் நாள் தோறும் தன்னைப் போற்ற அவர்களது அன்பு உள்ளத்திற்கு நெகிழ்ந்து அவர்கட்கு இனிமையாகப் பொருந்தி அன்புப் பெருக்கால் அவர்கள் வேண்டிய வரங்களை கொடுத்தது ஒரு முகம்.

மந்திரத்தை ஓதுதலோடு அமையாது மெய்நூல் முறையிற் பிறழாத அந்தணர்களது வேள்வி அசுரர் செயலால் தீங்குநேராதவாறு நிறைவேற்றி வைக்கிறது ஒரு முகம்.

நூல்களால் காட்டவியலாத எஞ்சிய மறைப் பொருள்களைத் தம் அன்பர்கள் இன்பமும் பாதுகாப்பும் எய்துமாறு ஆய்ந்துணர்த்தி திங்கள் போல் திசை விளக்குகின்றது ஒரு திருமுகம்.

தேவர்களின் பகைவர்களாகிய அசுரர்களை கொன்று களவேள்வி செய்தது ஒரு திருமுகம்.

குறவர் குடியில் தோன்றிய இளமை வாய்ந்த பூங்கொடி போன்ற இடையினை உடைய வள்ளி நாயகியோடு கலந்து மகிழும் மகிழ்ச்சியில் பொருந்தியது ஒரு திருமுகம்.

தன் பக்தர்களுக்கு காட்சி கொடுத்து அருள் புரிவது முருகனின் சிறப்பு. எழுதப் படிக்காதவர்களைக் கூட பேரறிஞராக மாற்றியுள்ளார் முருகப் பெருமான்.

**முருகனை வழியட்டு அவர் அருள் பெற்று சீரும் சிறப்புமாய் வாழ்வோம் உய்வோம்.**

## முருகப் பெருமான் திருவிழாக்கள்

**வைகாசி விசாகம்**

அசுரர்களின் தொல்லை தாங்கமுடியாத தேவர்களும் முனிவர்களும் சிவபெருமானை வேண்டினார்கள். அவரும் திருவருள் கொண்டு நெற்றிக் கண்ணைத் திறந்தார். அக் கண்ணில் இருந்து தோன்றிய தீப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறியானது சரவணப்பொய்கையில் உள்ள ஆறு தாமரை மலர்களில் விழுந்து ஆறு குழந்தைகளானது.

அக்குழந்தைகளை ஆறு கார்த்திகைப் பெண்கள் அமுதூட்டி வளர்த்தார்கள். அக்குழந்தையைக் காண சிவனும் சக்தியும் தரிசனம் தந்தார்கள். ஆறு குழந்தைகளையும் பார்வதி தேவி ஒன்றாக அணைத்தார். ஆறுமுகமும் ஒரு உடலுமான நாள் வைகாசி மாத விசாக நட்சத்திரம் ஆகும்.

வைகாசி விசாகத்தன்று காலை எழுந்து குளித்து முருகன் பாடல்களை பாட வேண்டும் அன்றைய தினம் நீர் ஆகாரம் பால் அருந்தலாம் பால் நைவேத்தியம் படைக்கலாம். கோயிலில் முருகன் அபிஷேகத்திற்கு பால் வாங்கித் தரலாம் அருகில் உள்ள முருகன் கோயிலுக்கு பாற்குடம் பாற் காவடி எடுக்கலாம்.

அன்றைய உபதேசம் முடிந்த இரவு இலகுவான ஆகாரத்தை குறைவாகச் சாப்பிட்டு விரதம் முடிக்கவும். கந்தஷஷ்டி கவசம் சண்முககவசம் போன்ற முருகன் பாடல்களை நாள் முழுவதும் பாடுவது சிறப்பானது.

இவ்விரதத்தால் பால் பொங்குவது போன்று வளம் பொங்கும்' எதிரிகள் விலகுவார்கள். மனதில் நிம்மதி குடியேறும்.

**கந்த ஷஷ்டி விரதம்**

முருகப் பெருமான் சூரபத்மனை அழித்து உலகிற்கு அருள் புரிந்த நன்நாள். ஐப்பசி மாதம் அமாவாசையை அடுத்த 6 நாட்கள் விரதம் இருந்து கொண்டாடுவர். ஆறு நாட்களிலும் காலையில் நீராடி தூய ஆடை அணிந்து கடுமையான விரதம் மேற்கொள்வர்.

பால் விரதம் இருப்போர் 6 நாட்களும் பால் மட்டும் அருந்துவர். நீர் விரதம் இருப்போர் நீர் மட்டுமே அருந்துவர். மௌன விரதம் இருப்போர் முதல் 5 நாட்கள் பால் பழம் உண்ணலாம் 6ம் நாள் பூரண உபவாசம் இருத்தல் வேண்டும். இரவில் தம்பம் விம்பம் கும்பங்களில் முருகனை பூஜித்து வெல்லம் சேர்ந்த நெய்யில் தயார் செய்த மோதகத்தை நிவேதித்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நாளில் திருமுருகாற்றுப்படை கந்தஷஷ்டி கவசம் கந்தரலங்காரம் கந்தர்அனுபூதி கந்தர் கலிவெண்பா படிக்க வேண்டும் இறுதி நாள் கந்த வேள் சூரனை அழிக்கும் சூரசம்ஹாரம் நடக்கும்.

7ம் நாள் அடியவர்களுக்கு அன்னம் அளித்து பாறணை செய்தல் வேண்டும் இந்த நோன்பினால் நினைத்த காரியம் உடனே நிறைவேறும் சஷ்டியில் விரதம் இருந்தால் கருப்பையில் கரு உற்பத்தியாகி நன் மக்கள் பிறப்பர் இதையே சட்டியில் இருந்தால் அகப்பையில் வரும் என்கிறார்கள் பெரியோர்.

**திருக்கார்த்திகை தீபம்.**

கார்த்திகை மாதம் பௌர்ணமி அன்று கிருத்திகை (கார்த்திகை) நட்சத்திரம் வருவதால் இம்மாதம் கார்த்திகை எனப்படுகிறது.

திருமாலுக்கும் பிரம்மனுக்கும் யார் பெரியவர் என்ற விவாதம் ஏற்பட்டது. சிவபெருமான் ஜோதி ரூபம் கொண்டு தன் அடி முடியை எவர் காண்கிறாரோ அவரே பெரியவர் என்றார். பிரமன் அன்ன ரூபம் கொண்டு மேலேயும் திருமால் வராக ரூபம் கொண்டு கீழேயும் சென்றனர். இறைவனின் அடி முடியை காண முடியவில்லை. பிரம்மனும் திருமாலும் அகந்தை அழிந்து அண்ணாமலையை வழிபட்டனர். ஒளி வடிவாகிய இறைவனை உணர்த்தும் விழா கார்த்திகை விழா நமது ஆணவ இருளை அழித்து ஞான ஒளியை பெறுவதற்கு உரிய விரதம் இதுவாகும்.

அன்று விரதம் இருப்பது நன்று. அவல் அப்பம் பாயாசம் வடை நெற்பொரி ஆகியவற்றை நைவேத்தியமாகப் படைக்கலாம் அத்தோடு இல்லம் தோறும் தீபங்களை ஏற்றி வழிபாடு செய்ய வேண்டும்.

கார்த்திகை விரதத்தை 12 ஆண்டுகள் தொடர்ந்து கடைப்பிடித்து வந்ததால் நாரத மகரிஷி சப்தரிஷிக்கு மேலான பதவி பெற்றார். பகீரதன் இழந்த நாட்டை பெற்றான். துன்பம் நீங்கி செல்வாக்காய் வாழ கார்த்திகை விரதம் இருப்போம்.

**தைப்பூசம்**

தை மாதம் பூச நட்சத்திரத்தில் இவ்விரதத்தைக் கொண்டாடுவர். இது பொதுவாய் பௌர்ணமி நாளில் இடம் பெறும். உலகில் நீரே முதலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றுவிக்கப்பட்டது என்ற ஐதீகத்தை காட்ட அன்று பல ஆலயங்களில் தெப்ப உற்சவம் நடைபெறும்

**பங்குனி உத்திரம்**

பங்குனி மாத உத்திர நட்சத்திரத்தில் வரும் பௌர்ணமியில் இவ்விழா கொண்டாடப்படுகிறது.

இதனை கல்யாண விரதம் என்பர். இத்தினத்தில் தான் பார்வதி பரமசிவனை மணந்தார். திருமகள் இவ்விரதம் இருந்து தான் விஷ்ணுவின் திருமார்பில் வீற்றிருக்கும் பேறு பெற்றார். 48 ஆண்டுகள் இவ் விரதம் இருப்போரின் மறுபிறவி அருட் பிறவியாய் அமையும்.

இந்திரன் இந்திராணியைப் பெற்றதும் பிரம்மன் சரஸ்வதியை நாவில் வைத்ததும் சந்திரன் 27 கன்னியரை மனைவியாக்கிக் கொண்டதும் இவ்விரத மகிமையாலாகும்.

**முருகனுக்குரிய விரதங்கள் மூன்று வகை.**

1. **வார விரதம் -**

   ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமை அன்று விரதம் இருப்பது

2. **நட்சத்திர விரதம் -**

   முருகன் அருளை வேண்டி ஒவ்வொரு மாதமும் கிருத்திகை (கார்த்திகை) நட்சத்திரத்தில் இருக்கும் விரதம். காலையில் குளித்து உணவருந்தாமல் பகலில் உணவு சமைத்து முருகனுக்கு வழிபாடு செய்து காக்கைக்கும் ஏழைக்கும் உணவு அளித்து உண்ண வேண்டும். இரவு அருகில் உள்ள முருகன் கோயிலுக்கு செல்ல வேண்டும். இரவில் பால் பழம் மட்டுமே அருந்த வேண்டும் இவ்விரதத்தால் குழந்தைச் செல்வம் கல்விச் செல்வம் அமையும்.

3. **திதி விரதம் -**

   ஒவ்வொரு மாதமும் சஷ்டி அன்று மேற்கொள்ளும் விரதம். இவ்விரதத்தால் நினைத்த காரியம் உடனே நிறைவேறும். ஐப்பசி சஷ்டி விரதம் இருப்பது 12 மாத விரதம் இருப்பதன் பலனைத் தரவல்லது.

**முருகனுக்கு உகந்த மலர்கள்**

மல்லிகை, முல்லை, சூரியகாந்தி, சாமந்தி, செவ்வலரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இசைக்கலை

ஆக்கம் - சத்தியலட்சுமி சிவலிங்கம்
பழைய மாணவி.யாழ் இந்து மகளிர் கல்லூரி.

ஈசனிலிருந்து அரவம் வரை, தன்பால் இசைவிக்கும் ஆற்றல் உடையது இசைக்கலை. கலைகளில் பயன் மிக்கது இக்கலை. தெய்வ வழிபாட்டுக்கு கை கொடுப்பதும் இசைக்கலையேதான். மனதை உருக்க மெய் சிலிர்க்க வைக்கும் பண்ணிசையை யாம் மறக்க முடியுமா?

இசை என்னும் பதம், மக்கள் மனதை தன் வசப்படுத்துவது அசைவிப்பது என்று பொருள். மனித குலத்தின் வரப்பிரசாதமாக இன்சுவை அமுதமாக ஆனந்தத் தேனாக இசையில் மூழ்க வைத்து மக்கள் மனதை மகிழ்விப்பது இசைக் கலையாகும். இனிமையான ஒலியின் சேர்க்கையே இசையாக அமைகின்றது. இனிமையும் எழிலும் தன்னிடத்தே கொண்டது. மனிதன் மாத்திரமன்றி அனைத்து உயிர்களும் உணர்ச்சி பெற்று உள்ளம் பூரிப்பது இக்கலையினாலே தான் என்றால் மிகையாகாது.

சமயங்கள் ஆதி காலம் தொட்டு இசையை வளர்த்து வருகின்றது. வேதகாலத்து மந்திரம் ஓதும் வழிபாட்டு முறையிலிருந்து இன்று நிலவும் பண்ணிசை வரை இசையின் வளர்ச்சியையும் அதன் சமய ஈடுபாட்டையும் நன்குணர வைக்கின்றது. இசையின் ஆற்றல் மனித மனதை எளிதில் தன் வயப்படுத்தி இறையுணர்வுக்கு வழி செலுத்த வைக்கிறமை இசையின் பெரும் பயனைப் புலப்படுத்தி நிற்கின்றது. சுருங்கச்சொல்லின் இசை மனிதனின் மனதை இறை முன் இட்டுச் செல்ல வைக்கிறது. அவனது இன்னல்களை துன்பங்களை மறக்க வைத்து மகிழ்ச்சியாக அவனை சிறிதுநேரம் தன்னும் களிப்பில் ஆழ்த்துகிறது. இத்தகைய ஓர் அருட்கலை இசைக் கலையேயாகும். கவின்கலைகளில் இக்கலை மிகவும் நுட்பமானது. கலையினை நாத யோகம் என இசை ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளார்கள். வாய்ப்பாட்டு ஒரு புறம். இசைக்கருவிகள் மறுபுறம் என இசை விண்ணையும் மண்ணையும் இணைக்கும் இனிய பாலமாக அமைகின்றது. இசை இறையுணர்வை எம்முள் ஊட்ட வல்லது என்பது அனுபவ வாக்கு. நேரம் போதாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பார்களே ஒழிய இசையை ரசித்து மகிழ எவர்தான் முன்வரார்? ஆலயங்களிலே இசைநிகழ்வுகள் பெரும்பாலும் உற்சவகாலங்களில் புனித கடமையாக பெருமளவில் இடம் பெறுவதை யாம் காணமுடிகிறது. பாடல்கள் இன்பம் தருவதோடு துன்பங்களையும் துடைத்தெறிய வல்லவையாய் அல்லல்களை மறக்கடிக்க வல்லனவாய் அமைவதை யாம் அன்றாட வாழ்வில் காண்கிறோம்.

பண்பட்ட சகல இனங்களுமே தத்தமக்கென இசை மரபைக் கொண்டுள்ளமையை வரலாறு கூறுகின்றது. காட்டில் வாழும் மரங்களும் நாடோடி மாந்தரும் கூட தமக்குரிய இசை மரபைக் கொண்டுள்ளனர். கேட்போரை தன்பால் இசைய வைக்கும் இக்கலைக்கு "இசை" என்ற நாமம் எத்துணை பொருத்தமாக அமைந்துள்ளது.

எமது சமயக்குரவர்கள் தமது பண்ணிசை இறைவனைத் தம்பால் ஈர்த்து எத்தனை அற்புதங்களை நிகழ்த்தினர். மக்களை இறைவழிபாட்டில் ஈடுபட வைத்தனர். பண் என்ற அரும்பெரும் பொக்கிஷத்தை மக்கள் சமுதாயத்திற்கு அளித்தனர். சுருங்கச்சொல்லின் மனித இனத்தை தமது இனிய தோத்திரப்பாடல்கள் பண்ணிசையால் மிக உயர்ந்த ஆன்மீகத்திற்கு அழைத்துச் சென்றனர். பண்டைக்காலத்தில் போரில் புண்பட்ட வீரர்களை தீய சக்திகளிடமிருந்து காப்பாற்ற காஞ்சிப்பண்ணையும் விளரிப்பண்ணையும் பாடினர் என்பதற்கு புறநானூறு சான்றாக அமைகிறது. பிணி அகல்கின்றது மகுடி இசையால் அரவம் ஆடுகிறது. தாவரம் வளர்கின்றது. குழந்தை தாலாட்டு கேட்டு அழுகையை மறக்கின்றது. மனிதன் இசை கேட்டு மனம் மகிழ்கின்றான் அமைதி அடைகிறான். இசையால் விழாக்கள் சோபிக்கின்றன. வீரம் பிறக்கின்றது. ஒழுங்கு தோன்றுகின்றது. பக்தி தூண்டப் பெறுகின்றது. எனவே சகலரும் இசைக்கலையை கற்போம் அதன் பல்வகைப் பயன்களையும் அடைந்து இன்புறுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் மொழிகள் சில – உங்களுக்காக

தொகுப்பு - திருமதி ஞானேஸ்வரி ஞானசேகரம்

1. தேன் என்று சொன்னால் இனிக்காது சுவைக்க வேண்டும். சேவை என்று சொன்னால் போதாது, செய்ய வேண்டும்.
2. அறிஞனுக்கு ரோஜாவின் அழகும் மணமும் தெரியும். முட்டாளுக்கு முள் மட்டுமே தெரியும்.
3. ஒவ்வொரு முறை சுவாசிக்கும் போதும் கடவுளை நினைத்திருந்தால் இறுதி மூச்சு பிரியும் போது தானாகவே அந்த நினைப்பு எழும்.
4. இரும்பு நீருடன் சேர்ந்திருந்தால் துருப்பிடிக்கும். நெருப்புடன் சேர்ந்திருந்தால் தூய்மையாகும். அது போல நீங்களும் சேர்க்கையை பொறுத்து மாறுவீர்கள்.
5. உண்பதில் மட்டும் சத்து இருந்தால் போதாது, பார்ப்பது கேட்பது முகர்வது உணர்வது எல்லாமே சத்தானதாக அமைய வேண்டும்.
6. வைரக் கல்லே ஆனாலும் சாணை பிடித்தால்தான் ஒளிவிடும் சோதனை நேரத்தில்தான் பக்தி ஒளிவிடும்.
7. அன்பு ஒரு முதலீடு எவ்வளவு போட்டாலும் வட்டியுடன் திரும்ப பெறலாம்.
8. ஆயிரம் அறிவுரைகளை அள்ளி வீசுவதை விட ஓர் அரிய செயலைச் செய்தல் நலம்.
9. உண்ணும் உணவை வீண்போகாமல் காப்பதே நீ செய்யும் முதல் அன்னதானமாகும்.
10. சில மூங்கில்கள் கரும்பைப் போல் தோற்றமளிக்கும் சில மூடர்கள் அறிஞர்களைப் போலக் காட்டிக்கொள்வார்கள்.
11. நீங்கள் செய்யும் தவறுகளை சுட்டிக் காட்டுபவர்களுக்கு மறவாமல் நன்றி தெரிவியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி

செல்வி வி. கலாவதி

**ம**னிதன் ஆரம்பத்தில் விலங்கு போல் குகையில் வாழ்ந்தான். அதன் பின்னரே மலையிலும் காட்டிலும் குடிசைகட்டி வாழக் கற்றுக் கொண்டான். உணவுப்பொருளைத் தேடி நாளைக்கு என்று சேர்த்து வைக்கவும், மழைக்கும் பனிக்கும் தப்புமாறு காப்புத் தேடிக் கொள்ளவும் கற்றுக் கொண்டான். இந்த முயற்சியே மனிதனை அறிவுள்ளவனாக ஆக்கியது. காய்கள், இறைச்சி போன்றவற்றை பச்சையாக உண்டான். பின்னர் அவற்றை நெருப்பில் சுட்டு உண்ணக் கற்றுக் கொண்டான். அந்நிலையிலிருந்து உணவு தயாரிக்க அறியலானான். அதுவே அவன் முதன்முதலில் கற்ற அறிவியல் எனலாம். அவ்வாறு சமைத்து உண்ட பிறகு மகிழ்ச்சியால் கூடிப்பாடி ஆடினது தான் அவன் பயின்ற முதல் கலை எனலாம்

குகைகளில் விலங்கு போல் வாழ்ந்த நிலையில் இருந்திருந்தால் அவனுக்கு அறிவு வளர்ச்சி ஏற்பட்டிருக்காது. அந்த வளர்ச்சி தேவையுமில்லை. குடிசை கட்டவும் சமைக்கவும் அறிந்த காரணத்தால் தான் விலங்குகளை விட உயர்ந்தவன் ஆனான் மனிதன். படிப்படியாக அறிவை வளர்த்துக்கொள்ளும் வாய்ப்பையும் பெற்றான். குடிசை கட்டிய அறிவில், கணிதத்தின் வித்துகள் இருந்தன. சமையல் அறிவில், பௌதிகம், இரசாயனம் இருந்தன. இந்தத்துறைகளே இன்று அறிவியல் என வழங்கப் பெறுகின்றன.

பழங்கால மனிதன் பாடியாடிய பொழுதுபோக்கில் கலைகளின் வித்துக்கள் இருந்தன. அவனுடைய பாடலில் இன்றைய இலக்கியம் , இசை ஆகிய கலைகள் உள்ளடங்கியிருந்தன. அவனுடைய ஆடலில் இன்றைய நாட்டிய, நாடகக்கலைகளின் வித்துகள் இருந்தன.

இன்று கல்வி இரண்டாக பகுக்கப்படுகிறது. அறிவியல் என்றும் கலை என்றும் பகுக்கப்படுகிறது. அதையே திருவள்ளுவர் எண்ணென்றும் எழுத்தென்றும் குறிப்பிடுகிறார். எண்ணும் எழுத்துமாகிய இருவகைக் கல்வியும் மக்களுக்கு இரு கண்கள் எனத்தக்கவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"எண்என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்*
*கண்என்ப வாழும் உயிர்க்கு"*

இத்தகைய கல்வியை நூல்கள் வாயிலாக கற்க இற்றைக்கு நாலாயிரம் ஆண்டுகளுக்கு மேல் ஆகியிருக்கும். நூல்களின் வாயிலாக கற்கும் கல்வியால் தான் மக்கள் உயர்வடைந்தார்கள் என்பது திருவள்ளுவரின் கருத்து. நூல்களை கற்பவரே மக்கள் என்றும் கல்லாதவர் விலங்கு என்றும் கொள்வதாக கூறுகிறார் வள்ளுவனார்.

*'விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்*
*கற்றாரோடு ஏனையவா"*

விலங்குகளுக்கும் மனிதனுக்கும் குகைவாழ்வில் தொடங்கிய சிறு வேறுபாடு கல்வி நாகரிகம் வளர்ந்த பின்னர் தெளிவாக ஏற்பட்டது எனலாம். அறிவியல் வளர்ச்சி நாகரிக வளர்ச்சி ஏற்பட்டு உலகெங்கும் மனிதன் சென்று வாழ்வதற்கும் பல நாட்டு மக்களுடன் பழகுவதற்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

ஓர் இடத்தில் உலகமே கூடிப் பேசும் அளவிற்கு நாகரீகம் வளர்ந்துள்ளது. இத்தனையும் கல்வி வளர்ச்சியால் ஏற்பட்டுள்ள நிலைமையாகும். குகையில் காட்டுமிராண்டிகளாக மனிதன் வாழ்ந்திருந்த காலத்தில் கல்விக்கு இடம் இருக்கவில்லை. இன்றோ கல்வியின் பயனால் பரந்த பெரிய உலகம் ஒரு குடும்பம் போலாகி விட்டது.

*"யாதானும் நாடாமால் ஊராமால் என்ஒருவன்*
*சாந்துணையும் கல்லாதவாறு"*

ஆரம்பத்தில் கருத்துக்களை நூறாயிரக் கணக்கானவர்களுக்கு சொல்ல முடியாது. நூல்களை ஆயிரக்கணக்காக வெளியிட முடியாது. ஏட்டுச்சுவடிகள் சிலவே எழுதமுடிந்தது. புலவர்களும் சிறு கூட்டத்தார்க்கே சொல்ல முடிந்தது.

இன்று அறிவியல் வளர்ச்சியின் பயனாக விரைவாக செயல்படும் தன்மையும் சில மணிநேரத்திலேயே விடயங்களை உலக மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோர்க்கும் எட்டக் கூடிய வகையில் அறியத் தரவும் முடிகிறது. ஆகவே வாழும் வகைகள் உலகம் ஒரு குடும்பமாக ஆனது போல் அறிவு பரவும் வகையிலும் உலகம் ஒரு பள்ளிக்கூடமாக ஆகியுள்ளது எனலாம்.

எனவே விலங்கு நிலையிலிருந்து மெல்லமெல்ல மனிதனாக வளர்ந்து உயர்ந்து நாகரிகம் பெற்ற மக்களினம் இன்று பெற்றுள்ள கல்வியின் பயனும் பெரிது. கல்வியைப் பரப்பும் வாய்ப்பும் பெரிது.

கல்வி என்பது பாடசாலைகளிலும் பல்கலைகழகத்திலும் கற்பது மட்டுமன்றி இங்கு கல்வி வளர்வது உண்மை. ஆனால் கல்வி அந்தளவில் நிற்பதால் பயனில்லை. கண்பார்வை உள்ள வரை நூல்களை கற்று, செவி உள்ள வரை அறிஞரின் சொற்களை கேட்டு வளர்வதுதான் உண்மைக் கல்வியாகும். எனவே கற்றல் தொடர்ந்து கொண்டே இருக்க வேண்டும். அதனால்தான் திருவள்ளுவர் "சாந்துணையும் கல்லாதவாறு" என்று வாழ்நாள் முழுவதும் கற்றல் நன்று என்று உண்மையை வலியுறுத்தியுள்ளார்.

கலையை கற்பவரும் அறிவியல் கற்க வேண்டும். அறிவியலால் மூளைக்கூர்மையும் கலை உள்ளப்பண்பாடும் ஏற்படும். இவை இரண்டும் மனிதனுக்குத் தேவை. ஆகவே இரு வகைக்கல்வியும் ஒவ்வொருவருக்கும் வேண்டும். இன்றைய கல்விமுறை மாணவர் ஒழுக்கத்தில் அதிக பங்கு எடுத்தாக வேண்டும்.

இன்று கல்வி நிலையம் நடத்துவோர் உயர்ந்த நோக்கம் கொண்ட உத்தமர்களாக அமைய வேண்டும். அவர்கள் தேர்ந்தெடுத்து வைக்கும் ஆசிரியர்கள் ஒழுக்கத்தையும் பண்பாட்டையும் போற்றுபவர்களாக அமையவேண்டும். இவ்வாறு கல்வி நிலையங்களில் அகமும் புறமும் சிறப்பாக அமையப்பெற்றால் கற்கும் மாணவாகள் நல்லவாகளாக விளங்குவார்கள்.

உலகம் எவ்வளவோ முன்னேற்றம் அடைந்து வரும் இக்காலத்தில் உலகத்தை ஒரு குடும்பமாக இணைத்து வாழச் செய்யவல்லது கல்வி. முறையான கல்விக்கு உரிய வகையில் இந்தப் பெரிய உலகமே ஒரு பாடசாலை போலாகி வருகிறது எனலாம். கல்வியை கற்போம் கவினுற வாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# JOURNEY BACK TO 1943

## MRS. THILAKA WIJEYARATNAM

It was a mild September morning on that day – the 9th of September Nineteen hundred and forty three. It was a D – day to about seventy five girls studying at Jaffna Hindu College.

From the feeder school – Tamil Primary School, at the edge of the College grounds. We – my batch – having, passed standard three have walked into the impressive buildings of Hindu College to be admitted to the lower first year. Some of my class – mates. Rajes Sambandan – now the editor of Yal Natham, Balambigai Pathma, Gnanam, Ratna as far as I can remember.

I remember that day when I went to the college. There was an air of mystery – nay secrecy. Teachers were in groups seriously discussing something I could not comprehend.

The bell rang for the 1st period. We had English with the efficient teacher Miss Y. Kanagasabai. I loved her class. That was the most interesting class. As we were going through the lesson, the peon came with a note. Miss Kanagasabai looked at us thoughtfully and then asked the girls to line up outside. We were puzzled. We did not do anything wrong. Why were we sent out? My heart went pitter pat.

We were the junior most, we were lead to the gate and outside. I looked back – all the girls in the college were there.

We marched on – round the grounds with our books and in silence wondering what was happening to us. Across the grounds on the Kannathiddy Road we were taken to an old fashioned house. I gasped why that was my ground uncle (Mylvaganam)'s house. We went in and there were some lady teachers whom I have never seen. A smiling young teacher took us in. the house was empty.

What happened to the inmates? I heard later they had put up sheds in the next compound and were living there after giving the house for a worthy cause.

In each room there were desks, chairs and in the verandah too. "This is your new school and it is called Jaffna Hindu Ladies' College". My class lower first year was in a room on a side. It opened into the small compound. It was quite enough for the seventy girls from lower first year to J.S.C which was the top class. My sister Leela was in J.S.C.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

My class teacher was Miss Mythila Sinnathamby. She had a pleasant face and a cheerful disposition. I missed Miss. Y. Kanagasabai But one look at Miss Mythila convinced me, I was in good hands.

This little school housed in my grand uncle's house, laid the foundation for me. Miss Mythila and the rest of the staff, namely Miss Ponniah, Misses Sinnadurai and the Principals Miss Gayathiri Ponnudurai were all dedicated teachers.

We were then a lucky set to be taught and trained and groomed by the talented young staff.

From then on it was a journey of progress. They taught us many values of life. They put us on the stage to perform. In short they gave us the confidence to face any situation.

There was another few cadjan sheds put up in the corner of the H.C. grounds as the school was growing. From 5th standard to prep S.S.C. there were classrooms. In the middle was a small yard where our sports were conducted. There were no tracks laid. No camps for houses and the items like crocodile races for the lower classes lime and spoon and obstacle – races and other such fancy items the sports was conducted by the wiry active Miss Ponniah. Hindu Ladies' College was a homely place and we all moved like the children of one family. Most of us were neighbours.

Those were unforgettable, happy days and it's still imprinted on my mind.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் இந்து மகளிர் கல்லூரி
# பழைய மாணவிகள் சங்கம் கொழும்பு
# பத்தொன்பதாவது ஆண்டு அறிக்கை 2012

சங்கத்தின் 18வது ஆண்டுப் பொதுக்கூட்டம் 2012ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 11ம் திகதி கொழும்பு 4, லொரன்ஸ் வீதி 75ம் இலக்கத்தில் உள்ள சரஸ்வதி மண்டபத்தில் தலைவி செல்வி சற்சொரூபவதி நாதனின் தலைமையில் நடைபெற்றது.

**பத்தொன்பதாவது ஆண்டு செயற்குழு அங்கத்தவர்கள் பின்வருமாறு.**

| | | |
|---|---|---|
| **போஷகர்** | :- | திருமதி சரஸ்வதி ஜெயராஜா |
| | | திருமதி உமாராணி குமாரசாமி |
| **தலைவி** | :- | செல்வி சற்சொரூபவதி நாதன் |
| **உப தலைவிகள்** | :- | திருமதி அபிராமி கயிலாசபிள்ளை |
| | | திருமதி கௌரி ரமணா |
| | | திருமதி மல்லிகாதேவி சரவணபவான் |
| **பொதுச் செயலாளர்** | :- | திருமதி விமலா மணிவாசகன் |
| **உதவிச் செயலாளர்** | :- | திருமதி தயாநிதி செல்வநாயகம் |
| **பொருளாளர்** | :- | திருமதி அபிராமி கயிலாசபிள்ளை |
| **உதவிப் பொருளாளர்** | :- | செல்வி சிவமலர் சுப்பிரமணியம் |
| **நிர்வாகக்குழு** | :- | திருமதி பஞ்சலக்குமி பத்மநாதன் |
| | | திருமதி சிவச்செல்வி சிவலோகநாதன் |
| | | திருமதி புவனேஸ்வரி யோகலிங்கம் |
| | | திருமதி ஞானேஸ்வரி ஞானசேகரம் |
| | | திருமதி ருக்குமணி அரசரத்தினம் |
| | | திருமதி அருளாம்பிகை கனகேந்திரன் |
| | | திருமதி தனபாக்கியம் நித்தியானந்தன் |
| | | திருமதி ராஜேஸ்வரி ஜெகானந்தகுரு |
| | | திருமதி திலகா விஜயரட்ணம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி மிதிலா ஸ்ரீ பத்மநாதன்
திருமதி சத்தியலட்சுமி சிவலிங்கம்
திருமதி அரியசிகாமணி
திருமதி பரமேஸ்வரி சச்சிதானந்தன்
திருமதி தயாநிதி உதயகுமார்
திருமதி உஷா சிவராஜா
திருமதி தனபாக்கியம் நித்தியானந்தன்
திருமதி தயாநிதி சீறிஸ்கந்தராஜா

**கணக்குப் பரிசோதகர் :-** கணேசலிங்கம் அன்ட்கொம்பனி,
சார்டட் அக்கவுண்டன்ஸ்,
2, Ranjan Road,
Off Station Road,
Colombo 6

**யாழ் நாதம் ஆசிரியை :-** திருமதி அபிராமி கயிலாசபிள்ளை

## இவ் வருடத்தின் நிகழ்வுகள்

**சர்வதேச மகளிர் தினம்:-**

செல்வி சற்சொரூபவதி நாதனின் தலைமையில் மகளிர் தினக் கொண்டாட்டம் 2012 மார்ச் மாதம் 03ஆம் திகதி சரஸ்வதி மண்டபத்தில் கொண்டாடப்பட்டது. சிறப்பு நிகழ்வாக யாழ் இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் "நந்தலாலா" என்ற நாட்டிய நாடகத்தையும் "யமலோகத்தில் கொம்பியூட்டர்" என்ற நாடகத்தையும் வழங்கி சிறப்பித்தார்கள்.

இதற்கு கட்டிடக் கலைஞரும் மாநகர சபை உறுப்பினருமான லயன் குகவரதன் சண்முகானந்தனும் பாரியாரும் பிரதம அதிதிகளாக வருகை தந்திருந்தார்கள். கௌரவ அதிதிகளாக யாழ் இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி வேதவல்லி பேரின்பநாதனும் பம்பலப்பிட்டி இராமநாதன் மகளிர் கல்லூரி அதிபர் திருமதி கோதை நகுலராஜாவும் வருகை தந்திருந்தார்கள்.

யாழ் நாதத்தை ஆசிரியை திருமதி அபிராமி கயிலாசபிள்ளை வெளியிட்டு வைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி மல்லிகாதேவி சரவணபவானும் திருமதி ருக்குமணி அரசரத்தினமும் சிறப்பு பெண்மணிகளாக கௌரவிக்கப்பட்டார்கள்.

எமது ஒன்றுகூடல் 2012ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 29ஆம் திகதி ராமகிருஷ்ண வீதியிலுள்ள சண்முகாஸில் மாலை 6.30 மணிக்கு நடைபெற்றது. இதற்கு யாழ் இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவியும் எமது சங்க வளர்ச்சிக்கு அயராது உழைத்தவருமான திருமதி சிவகாமி அம்பலவாணர் வருகை தந்து சிறப்பித்திருந்தார்.

எங்கள் கல்லூரியின் 2011ஆம் ஆண்டு சிறந்த மாணவியான செல்வி பிரவீணா விஜயகுமாருக்கு எமது சங்கத்தினால் வருடம் தோறும் வழங்கப்படும் (ரூபா 56,000/= பெறுமதியான) பொன்விருது வழங்கப்பட்டது.

**யாழ் இந்து மகளிர் கல்லூரி மாணவிகளுக்கு உதவி :-**

எங்கள் சங்கத்தின் அன்பளிப்பான நிலையான வைப்பில் உள்ள ரூபா 5,00,000/= த்தில் வரும் வட்டிப்பணத்தில் திறமையான, வசதி குறைந்த 8 மாணவர்களுக்கு மாதம் தோறும் தலா ரூபா 500/= வழங்கப்பட்டு வருகின்றது. அதிபர் உறுதிப்படுத்தி மாணவிகளின் கையொப்பத்துடன் கடிதம் சங்கத்துக்கு அனுப்பியுள்ளார். அவர்களின் பெயர்கள் கீழே உள்ளன.

| | | | |
|---|---|---|---|
| விதுசனா சிவராசா | 8D | மதிவதனி சரவணபவநாதன் | 8D |
| வான்மதி நாகலிங்கம் | 10C | தர்சிகா பாலேந்திரன் | 10C |
| பவானி குகதாசன் | 10A | பிரசாந்தி மதியரசு | 10C |
| தட்சிகா பாஸ்கரன் | 9C | மேரி மேனகா நாகராஜா | 9C |

**யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை மாணவிகளுக்கு உதவி :-**

எங்கள் சங்கத்தின் அன்பளிப்பான நிலையான வைப்பில் உள்ள ரூபா 1,00,000/= த்தில் வரும் வட்டிப்பணத்தில் திறமையான, வசதி குறைந்த 3 மாணவர்களுக்கு வருடம் தோறும் தலா ரூபா 3,500/= வழங்கப்பட்டு வருகின்றது. அதனை அவர்களின் வயதை கருத்தில்கொண்டு அதிபர் திருமதி சூரியவதனி அரசரத்தினம் ஹற்றன் நஷனல் வங்கியில் கணக்கு திறந்து வைப்புச் செய்துள்ளார். உறுதிப்படுத்தி கடிதம் அனுப்பியுள்ளார்கள். அவர்களின் பெயர்கள் கீழே உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| செல்வி கிஷொக்குமார் வத்சனா | 3A |
| செல்வி கண்ணப்பநாயனார் பூரணி | 4B |
| செல்வி நேசன் சங்கீர்த்தனா | 4C |

**சங்க அங்கத்துவம்**

எங்கள் சங்கம் வடகீழ் பிராந்திய பாடசாலைகளின் பழைய மாணவர் சம்மேளத்தில் (வ.கீ.பி.மா.சம்) ஓர் அங்கத்துவ சங்கமாக தொடர்ந்தும் இருக்கின்றது.

எமது சங்கக் கூட்டங்களையும் ஏனைய நிகழ்வுகளையும் நடத்துவதற்கு இலவசமாக சரஸ்வதி மண்டபத்தைத் தந்துதவும் இந்து வித்தியா விருத்திச் சபைக்கு நாம் என்றும் கடமைப்பட்டுள்ளோம்.

எங்கள் சங்கக் கணக்குகளை இலவசமாக பரிசோதனை செய்து தரும் திரு. சச்சிதானந்தனுக்கும் இதை ஒழுங்கு செய்து தந்த திருமதி. பரமேஸ்வரி சச்சிதானந்தனுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

சங்க அலுவல்களில் எனக்கு உறுதுணையாக இருந்த எங்கள் சங்கத் தலைவிக்கும், உபதலைவிகளுக்கும், பொருளாளருக்கும், நிர்வாகக்குழு அங்கத்தவர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

எங்கள் சங்கமும் கல்லூரியும் தொடர்ந்து வளர்ச்சிப் பாதையில் முன்னேற கல்லூரி வளாகத்திலுள்ள நடுத்தோட்ட இராஜவரோதயப் பிள்ளையார் அருள்பாலிப்பாராக.

திருமதி விமலா மணிவாசகன்
கௌரவ செயலாளர்
06.02.2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் இந்து மகளிர் கல்லூரி
# பழைய மாணவிகள்சங்கம் கொழும்பு
# இருபதாவது ஆண்டு அறிக்கை – 2013

சங்கத்தின் இருபதாவது ஆண்டுப்பொதுக் கூட்டம் 2013 ம் ஆண்டு மாசி மாதம் 23ம் திகதி செல்வி. சற்சொரூபவதிநாதன் தலைமையில் திருமதி அபிராமி கயிலாசபிள்ளை அவர்களின் இல்லத்தில் நடைபெற்றது.

### இருபதாவது ஆண்டு செயல்குழு அங்கத்தவர்கள் வருமாறு:–

**போஷகர்** :- திருமதி சரஸ்வதி ஜெயராஜா
திருமதி உமாராணி குமாரசாமி

**தலைவி** :- திருமதி அபிராமி கயிலாசபிள்ளை.

**உபதலைவி** :- செல்வி சற்சொரூபவதிநாதன்
திருமதி தயாநிதி செல்வநாயகம்
திருமதி மனோண்மணி அருணாசலம்

**செயலாளர்** :- திருமதி மிதிலா ஸ்ரீ பத்மநாதன்

**உபசெயலாளர்** :- திருமதி ஞானேஸ்வரி ஞானசேகரம்

**பொருளாளர்** :- திருமதி சிவமலர் சுப்பிரமணியம்

**உபபொருளாளர்** :- திருமதி பொன்மலர் கந்தசாமி

**நிர்வாகக்குழு** :- திருமதி பஞ்சலக்குமி பத்மநாதன்
திருமதி ருக்குமணி அரசரட்ணம்
திருமதி தனபாக்கியம் நித்தியானந்தன்
திருமதி அருளாம்பிகை கனகேந்திரன்
திருமதி சாவித்திரி உமாமகேஸ்வரன்
திருமதி பரமேஸ்வரி சச்சிதானந்தம்
திருமதி சிந்தாமணி வன்னியசேகரம்
திருமதி தற்பராதேவி தில்லைநாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி திலகா விஜயரட்ணம்
திருமதி சத்தியலக்குமி சிவலிங்கம்
திருமதி விமலா மாணிக்கவாசகன்
திருமதி கௌரி தேவசேனாதிபதி
திருமதி மல்லிகாதேவி சரவணபவன்
திருமதி கௌரி ரமணா
திருமதி புவனேஸ்வரி யோகலிங்கம்
திருமதி தயாநிதி ஸ்ரீஸ்கந்தராஜா
திருமதி உஷா சிவராஜா
திருமதி அரியசிகாமணி தம்பையா

**கணக்குப்பரிசோதகர்** :- கணேசலிங்கம் அன்ட் கம்பனி,
சார்டட் அக்கவுண்டன்ஸ் - 2
Ranjan Road,
Off Station Road,
Colombo - 06.

**யாழ்நாதம் ஆசிரியை** :-திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு

**உதவி** :- திருமதி மிதிலா ஸ்ரீபத்மநாதன்

**பொன்விருது** :- எங்கள் கல்லூரியின் 2012 ம் ஆண்டுக்கான சிறந்த மாணவிக்கான பொன்விருது எமது சங்கத்தினால் செல்வி ஆத்மிகா முருகையாவுக்கு வழங்கப்பட்டது.

**யாழ் இந்து மகளிர் கல்லூரி மாணவிகளுக்கு உதவி** :-
எங்கள் சங்கத்தின் அன்பளிப்பான நிலையான வைப்பிலுள்ள ரூபா 500,000/= த்தில் வரும் வட்டிப்பணத்தில் திறமையான, வசதி குறைந்த 8 மாணவர்களுக்கு மாதந்தோறும் தலா ரூபா 500/= வழங்கப்பட்டு வருகின்றது.

## இவ்வருடத்தின் நிகழ்வுகள்

**இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை மாணவிகளுக்கு உதவி :-**
எங்கள் சங்கத்தின் அன்பளிப்பான நிலையான வைப்பிலுள்ள ரூபா 100,000/= த்தில் வரும் வட்டிப்பணத்தில் திறமையான, வசதி குறைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3 மாணவர்களுக்கு வருடந்தோறும் தலா ரூபா 3500/= வழங்கப்பட்டு வருகின்றது.

**சங்க அங்கத்துவம் :-**

எங்கள் சங்கம் வடகீழ் பிராந்திய பாடசாலைகளின் பழைய மாணவர் சம்மேளனத்தில் (வ. கீ. பி. மா. சம்) ஓர் அங்கத்துவ சங்கமாக தொடர்ந்தும் இருக்கின்றது.

எமது சங்கக் கூட்டங்களையும் ஏனைய நிகழ்வுகளையும் நடத்துவதற்கு இலவசமாக சரஸ்வதி மண்டபத்தைத் தந்துதவும் இந்து வித்தியாவிருத்திச் சபைக்கு நாம் என்றும் கடமைப்பட்டுள்ளோம்.

எங்கள் சங்கக் கணக்குகளை இலவசமாக பரிசோதனை செய்து தரும் திரு. சச்சிதானந்தனுக்கும் இதை ஒழுங்கு செய்து தந்த திருமதி பரமேஸ்வரி சச்சிதானந்தனுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அலுவல்களில் எனக்கு உறுதுணையாக இருந்த எங்கள் சங்கத் தலைவிக்கும் உப தலைவிக்கும் பொருளாளருக்கும் நிர்வாகக்குழு அங்கத்தவர்களுக்கும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

எங்கள் சங்கமும் கல்லூரியும் தொடர்ந்து வளர்ச்சிப்பாதையில் முன்னேற கல்லூரி வளாகத்திலுள்ள நடுத்தோட்ட இராஜவரோதயப்பிள்ளையார் அருள்புரிவாராக.

திருமதி மிதிலா ஸ்ரீபத்மநாதன்
பொதுச் செயலாளர்

திருமதி அபிராமி கயிலாசபிள்ளை
தலைவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வி புஷ்பா செல்வநாயகம்
## நல்லூர்
## பழைய மாணவி யாழ்/ இந்து மகளிர் கல்லூரி


31.08.1929

சிறந்த மேடைப் பேச்சாளரும், ஆன்மீகவாதியும், சமூக சேவையாளரும், யாழ் இந்து மகளிர் கல்லூரி முன்னாள் ஆசிரியையுமான இவருக்கு நல்லூர்ப் பிரதேச செயலக கலாசாரப் பேரவை இவ்வருடம் "கலைஞானச்சுடர்" விருது வழங்கிக் கௌரவித்தமையையிட்டு பெருமை கொள்கின்றோம்.

*- ஆசிரியர் -*

## கல்லூரியின் சிறந்த மாணவிகள்

| | |
|---|---|
| 2001 | செல்வி காயத்திரி சிற்சபேசன் |
| 2002 | செல்வி ஜெயப்பிரபா ஜெகதீஸ்வரன் |
| 2003 | செல்வி நிலக்ஷி மகாதேவா |
| 2004 | செல்வி துளசி கந்தசாமி |
| 2005 | செல்வி பாபினி பரஞ்சோதி |
| 2006 | செல்வி கபிலினி அருட்செல்வன் |
| 2007 | செல்வி கோபிகா குலசிங்கம் |
| 2008 | செல்வி மோகனரஞ்சனி ரவீந்திரன் |
| 2009 | செல்வி செல்வலச்சுமி செல்வராஜன் |
| 2010 | செல்வி நாராயணி வெற்றிவேல் |
| 2011 | செல்வி பிரவீணா விஜயகுமார் |
| 2012 | செல்வி அத்மிகா முருகையா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"நான் இங்கு வசிக்கிறேன். இவ்விடம் அழகாக இருக்கும்."

**"It ought to be beautiful, I live here."**

யாழ் இந்து மகளிர் கல்லூரி ப.மா.ச. கொழும்பு

**Jaffna Hindu Ladies College O.G.A. Colombo**

## சிறந்த மாணவிக்கான விருது - 2012

யாழ் இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவியும், எங்கள் சங்க நிர்வாக குழு உறுப்பினராக அதன் நடவடிக்கைகளுக்கு பூரண ஒத்துழைப்பு தந்தவரும், எங்கள் சங்கம் முதல்முதலாக வைத்த மலிவு விற்பனைக்கு பிரதம அதிதியாக வந்தவரும், சங்கத்துக்கு நிதி உதவி தந்தவரும், மல்பா குறுப் குடும்ப தனியார் நிறுவனத்தின் பணிப்பாளரும், தெலியகொடை பூபாலவிநாயகர் ஆலயத்தின் சைவமுன்றேற்றச் சங்கத்தின் உறுப்பினராக இருந்தவரும், இந்து மகளிர் சங்கத்தின் உறுப்பினரும், ஆன்மிகத்தில் மிகுந்த ஈடுபாடு உள்ளவருமான

## திருமதி மல்லிகாதேவி சரவணபவன்

அவர்களின் சேவையைப் பாராட்டி கௌரவிக்கும் முகமாக **இரண்டாயிரத்து பன்னிரண்டாம் ஆண்டு பங்குனித் திங்கள் மூன்றாம் திகதி** (03.03.2012) கொழும்பு 4 பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் சர்வதேச மகளிர் விழாவாகிய இன்று

## "சிறந்த பெண்மணி"

என்று எமது சங்கம் இச்சான்றிதழை வழங்கி கௌரவிக்கின்றது.

..............................................

செல்வி சற்சொரூபவதி நாதன்
தலைவி

..............................................

திருமதி கௌரி ரமணா
கௌரவசெயலாளர்

President
Miss. Satsorupawathy Nathan
112 3/1, Galle Road
Colombo 4
Tel: 2580215

Secretary
Mrs. Gowri Ramana
15, Madangahawatta Lane
Colombo 6
Tel: 2360228

Treasurer
Miss. Sivamalar Subramaniam
24, Deal Place A
Colombo 3
Tel: 2575566



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"நான் இங்கு வசிக்கிறேன். இவ்விடம் அழகாக இருக்கும்."
**"It ought to be beautiful, I live here."**

யாழ் இந்து மகளிர் கல்லூரி ப.மா.ச. கொழும்பு
**Jaffna Hindu Ladies College O.G.A. Colombo**

## சிறந்த மாணவிக்கான விருது - 2012

யாழ் இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவியும், எங்கள் சங்க நிர்வாக குழு உறுப்பினராக அதன் நடவடிக்கைகளுக்கு தன் துணைவருடன் சேர்ந்து தவறாது பங்கு பற்றி பூரண ஒத்துழைப்பு தந்தவரும், குடும்பத் தலைவியாக குடும்பத்தை சிறப்புடன் நிர்வகித்தவரும், ஆன்மிகத்தில் மிகுந்த பற்றுள்ளவரும், தல யாத்திரை பல சென்று வந்தவருமான

## திருமதி ருக்குமணி அரசரத்தினம்

அவர்களின் சேவையைப் பாராட்டி கௌரவிக்கும் முகமாக **இரண்டாயிரத்து பன்னிரண்டாம் ஆண்டு பங்குனித் திங்கள் மூன்றாம் திகதி** (03.03.2012) கொழும்பு 4 பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் சர்வதேச மகளிர் விழாவாகிய இன்று

## "சிறந்த பெண்மணி"

என்று எமது சங்கம் இச்சான்றிதழை வழங்கி கௌரவிக்கின்றது.

..........................................................
செல்வி சற்சொருபவதி நாதன்
தலைவி

..........................................................
திருமதி கௌரி ரமணா
கௌரவசெயலாளர்


President
Miss. Satsorupawathy Nathan
112 3/1, Galle Road
Colombo 4
Tel: 2580215

Secretary
Mrs. Gowri Ramana
15, Madangahawatta Lane
Colombo 6
Tel: 2360228

Treasurer
Miss. Sivamalar Subramaniam
24, Deal Place A
Colombo 3
Tel: 2575566





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






யாழ் இந்து மகளிர் கல்லூரியின் வர்த்தக மன்றத்தினால் வெளியிடப்பட்ட
'வணிக வனிதை' புத்தக வெளியீட்டு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட
யாழ் இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவியும், வர்த்தகப் பட்டதாரியுமான
திருமதி மிதிலா ஸ்ரீபத்மநாதன் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ் / இந்து மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கொழும்பு நடாத்திய வருடாந்த விழாவில் கல்லூரியின் பழைய மாணவி கலாபூஷணம் திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு வீணை இசை வழங்குகிறார்.



திருமதி ருக்குமணி அரசரத்தினம் அவர்களின் சேவையை பாராட்டி கௌரவிக்கும் முகமாக 2012 பங்குனித் திங்கள் மூன்றாம் திகதி பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற சர்வதேச மகளிர் தின நிகழ்வின் போது

DESIGNED & PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO-13. TEL: 011 2330195

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org